mukadu.editer@gmail.com

# முகடு

"தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

Mukadu

இருமாத இலக்கிய இதழ். கார்த்திகை – மார்கழி 2015 ஓலை – 8



# முகடு இருமாத இலக்கிய இதழ்

**ஆசிரியர்குழு**

J.jahsd;
NahF.mUz fpup
f.Fkud;
ep.t d[ d;
g.ghujPd;

**இதழ் வடிவமைப்பு**

ep.t d[ d;
g.ghujPd;

**இதழ் ஒப்புநோக்குனர்**

t z ;zh Nru;


**தொடர்புகளுக்கு:**
**தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை**
http://www.facebook.com/pages/ **தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை**
mukadu.editer@gmail.com



**படைப்புக்கள் ஆலோசனைகள் அனுப்பவேண்டிய முகவரி**
**மின்னஞ்சல்**:-mukadu.editer@gmail.com
**முகநூல்**:-http://www.facebook.com/pages/ **தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை**


“xU kdpjdpd; Rakhd Moej; rpej;idf;Fk;mtd; $wpa mtjhdpg;Gf;Fk; vej; Gjj;fKk; khwwhf KbahJ> vdgij ehk; Gupe;J nfhs;sNtz;Lk;kwwtuf;spd; ghu;i tapy; vOk; fUj;J;ff;s;Ma;Tf;s;mDgtqf;s; ahTk;jhk; thoj;y;vDk;mbggil apNy vOk; tpilaqf;s; mit ekf;fhd rpej;id myy”.

**“அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய் தந்நோய்போல் போற்றாக் கடை’**

**இளம் படைப்பாளிகளின் படைப்புக்கள் முதன்மைப்படுத்தப்படும்**
**எம் பண்பாட்டு வாழ்வியலோடு கூடிய பிரஞ்சு மொழி ஆக்கங்கள்**
**இளையவரிடம் இருந்து வரவேற்கப்படுகின்றது.**

**நன்றி**

ப.பர்த்தீ

கவிதை

# சாம்பல் பூக்கள்

உங்கள் உடலங்கள்
உழைப்புக்காய் உப்பேறி
உச்சத்தில் நீறாகி
தேசத்தில் படர்ந்துவிட

கண்ணீர் துளிகளிலும்
கை வணங்கும் மனங்களிலும்
எண்ணி முடியாத
ஏக்கத்தை விதைத்தீரே


மண்ணில் பிறந்தவர்க்கு
மானமுள்ள விடுதலைதான்
விண்ணில் போனாலும்
வீழாத வாழ்வென்றீர்

எண்ணிப் பார்த்தவுடன்
எதிரி துடை நடுங்க
கண்ணின் இமை போல
காத்தீரே எமை எல்லாம்

எல்லா சோகங்களும்
ஏக்கங்களால் பின் தொடர
கல்லால் நெஞ்சங்களும்
கண்ணுருகி பேர்சொல்ல

வல்ல சக்திகள் நீர்
வாழ்ந்த கொள்கைகள் நீர்
பொல்லாப் பிறப்பினிலே
புழுதிகள் நாம் உம்முன்னே

எங்கு சென்றிடினும்
உங்கள் சாம்பல் மேல்
உம் கனவை நனவாக்க
பூத்த செடிகள் நாம்



"அடங்குதலும் அடிபணிதலும்
ஆகாது பெண்ணே
அடிமைகளாய் இன்னும்
ஆணாதிக்க சுவருக்குள்
உன் வாழ்வா?"

என்ற வரிகளுக்குச் செந்தக்காறியான **ரதிமோகனுடன்** ஒரு சந்திப்பு
இவர் ஊறறிந்த பிரபலம் இல்லாவிடினும் நாளும் முகப்புத்தகத்தில் கவிதை எழுதும் படைப்பாளி
அவர் படைப்புக்கள் இதுவரை தெகுப்பாக வராவிடினும் அவர் ஆழுமை தமிழ் இலக்கியப்பரப்பில்
பதிவேற்றப்பட வேண்டிய ஒன்றே.




**வணக்கம் ரதி மோகன் என்ற உங்களின் அடையாளம் என்ன?**
**உங்களை பற்றி அறியத்தாருங்கள்?**

தாயகத்தில் இருந்து புலம்பெயர் ந்து வந்து பல வருடங்களாக இங்கு வாழ்ந்து வருகிறேன்...இங்கு வந்தபின் கல்வியை தொடர்ந்து வயோதிப காப்பகத்தில் தொழில் புரிகிறேன். தொழில்ரீதியாக நோயாளர், வயோதிபர் பராமரிப்பு என ஏதோ ஒரு மனதிருப்தியுடன் வாழ்வியல் நகர்கிறது

**நாட்டை விட்டு புலம் பெயர்ந்ததை எவ்வாறு உணர்கின்றீர்கள்?இங்கு உங்களுக்கான வாழ்க்கை முழுமை தருகின்றதா?**

ஆம் என்று முழுமனதோடு சொல்ல முடியாது. ஏனென்றால் தாயக நினைவுகள் உயிருடன் கலந்து இருக்கிறது.

அங்கு சுற்றம் சூழ அன்பாக,இன்பமாக இருந்தோம். இங்கு பணம், படிப்பு வேலையென எல்லாம் முழுமையாக இருந்த போதும் மண்ணில் வாழ்ந்த வாழ்வை எதுவும் ஈடுசெய்ய முடியாது. நிம்மதி இழந்த, ஒன்றாய் இருந்து கதைப்பதற்கு நேரமிற்ற கடுகதி வாழ்வு.

**நாடு திரும்பும் எண்ணம் உண்டா?**

இதுவரை நினைக்கவில்லை. காரணம் இங்கு ஓர் வாழ்விற்குள் ஆழமாய் கால் பதித்து விட்டோம். அதை விட்டு வெளியேறுவது சிரமம் உள்ளத்தின் ஆழத்தில் தாயக ஆசை இருந்தபோதும் முடியாத ஒன்றாக தற்காலநிலை. சிலசமயம் மனம் மாறலாம் தெரியவில்லை.

**அப்படியாயின் புலத்து வாழ்வின் அழுத்தங்களை விரும்பி ஏற்கின்றீர்கள் என்று எடுத்துக்கொள்ளளாமா?**

ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். இங்கு வாழ வந்து விட்டோம். அதை ஏற்றே ஆக வேண்டும. கட்டாய நிலைஎன சொல்லலாமே.

**உங்கள் தொழில் சார்ந்து பெற்ற குழந்தைகளே தாய் தந்தையை அச்சிரமத்தில் சேர்க்கும் காலமாய் இருக்கிறது ஆனாலும் நீங்கள் அதை தொழிலாக செய்கின்றீர்கள் அதன் அனுபவம் எப்படி பட்டது?**

எனக்கு முழு மனத்திருப்தியை தருகிறது. நான் விஞ்ஞானத்ததுறையில் தான் கல்வி பயின்றேன். வைத்தியம் சம்பந்தமான தொழிலில் அதிக நாட்டம் இருந்தது... அது எனது தந்தையின் ஆசையும் கூட. படிப்பதற்கு எல்லாவசதியும் இருந்தது. அதை சீராக நான் பயன்படுத்தி தந்தையின் கனவை நனவாக்கவில்லை என்ற கவலை இன்றும் என்னோடு இருக்கிறது. மருத்துவத்துறைக்குள் நுழைவதற்கான புள்ளிகள் கிடைக்க பெற வில்லை. அந்த சமயம் இங்கு புலம் பெயர் ந்து வந்தபோது தொடர்ந்து கல்வியைதொடர்ந்தேன்.. ஆனால் இதில் ஆத்மதிருப்தி அடைகிறேன் பல நோய்களால் அவர்கள் படும் வேதனை முதுமையின் தாக்கம் இவற்றை பார்த்து ஆரம்பத்தில் மனம் சஞ்சலப்பபட்டேன். இளகிய மனம் என்னுடையது. அவர்கள் இறந்தால் உடனேயே அழுதிடுவேன் இப்போது என்னை மிக பக்குவப்படுத்திக்கொண்டேன். சேவையாக கருதுகிறேன் அவர்களின் புன்சிரிப்பில் மனதில் திருப்தி. அன்பு கருணை பொறுமை எனக்குள் வளர்த்துக்கொண்டேன். மேற்கொண்டு படிக்கும் எண்ணம் உள்ளது.

**உங்களின் குடும்பவாழ்வுக்கும் தொழிலுக்குமிடையிலான சமனிலையை எவ்வாறு பேணுகிறீர்கள்?**

நான் வாழ்வோடு சிரமத்துடன் பயணிக்கிறேன் என சொல்லலாம். வேலைப்பளு. தொழில் ஒருபுறம், வீட்டுவேலை என கடினமே. புலம்பெயரும்வரை கஸ்ரம் தெரியவில்லை. சாப்பாடு மேசைக்கு வரும்.. அம்மாவுடன் வாழ்ந்தகாலம். இங்கு நான் சமைத்தால்தான் சாப்பாடு மேசை வரும்.காலநீரோட்டத்தில் எல்லாமே பழகி இதுதான் அன்றாட வாழ்வு என்றாகிவிட்டது.

**அடிப்படை வாழ்வியல் அழுத்தங்களுக்கு பின்னாலும் ஓயாத கவியலைகள் ரதிமோகன் எவ்வாறு அறிமுகமாகின்றார்?**

தமிழ் என் உயிர் மூச்சு. சிறுவயதில் இருந்து கவிதை எனும் பெயரில் கிறுக்குவேன். விஞ்ஞானமே என் கல்வியாக இருந்தபோதும் எம் வீடு ஓர் கலைக்கூடம் எம் சகோதர ர்கள் வயலின், மிருதங்கம் என இசைப்பது மகிழ்வாயிருக்கும்... நான் பட்டிமன்றங்கள், கவிதையரங்கம், மேடைப்பேச்சு என தமிழோடு என் பயணம் இருந்தது.. ஆரிய திராவிடாஅபிவிருத்திச்சங்கம் கீழ் பிரவேசபண்டித பரீட்சை எழுதினேன், ஆனால் புலம்பெயர்வால் தொடர முடியவில்லை.இங்கு வந்தபின் தமிழுக்கும் எனக்குமான இடைவெளி நீண்டு இருந்தது. முகநூல் எனக்கொருபாலமாகி தூ ங்கியிருந்த தமிழ் மீண்டும் சுடர் விடவைத்தது.

தமிழில் என்னால் முடிந்த அளவிற்கு சாதிக்க வேண்டும் என்ற ஆசை வந்தது. என் நட்புக்குள் நல்ல பிரபல எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தரும் ஊக்கமும் ஒருவகை காரணம் என் எழுத்திற்கு..அந்த வகையில் என் எழுத்துக்கள் சிரமத்தின்இடையிலும் ஓயாதகவியலைகளாய் உத்வேகம் பெறுகிறது.

**தமிழில் சாதிக்க வேண்டும் என்பது எதனை அடையாளப்படுத்தியக் கூற்று?**

எனது கவிதைகளை தொகுத்து நூலாக்க வேண்டும்.என்பது என் ஆசை. சிறுகதை தொகுப்பு ஒன்றாவது வெளியிடவேண்டும் மற்றைய ஆசை.

நான் கவிஞன் அல்ல. தமிழில் நடை பயிலும் ஓர் குழந்தை... எனக்கு ஊன்றுகோலாக தட்டிகொடுக்கும் உள்ளங்கள் என்பின்னே இருக்கும்வரை.ஏதோ எனக்கு தெரிந்தவற்றை எழுதிக்கொண்டேயிருப்பேன்.

அப்படியானால் ஒரு குழந்தையின் பார்வையில் கவிதை என்பது?

கவிதை என்பது உணர்வுகளின் வெளிப்பாடு...அனுபவத்தின் கீறல்கள் என்பேன்..

காண்பவை கலைகண்களில் கவிதையாகிறது

**அப்படியானால் உங்கள் கவிதை அனுபவப்பட்டவையா?**

எல்லாம் என சொல்ல முடியாது. அனேகமானவை நான் அனுபவித்த , அனுபவிக்கின்ற எனது உணர்வுகளை தாங்கி நிற்பவை.. மற்றவை சமுதாயத்தை கண்களில் நிறுத்தி பார்த்துப் படைப்பேன்...

காலநீரோட்டத்துடன் என் கவிதைகளும் பயணிக்கும

**உங்கள் கவிதைகளை எங்கு பிரசுரிக்கின்றீர்கள்?**

அநேகமானவை முகப்புத்தகத்தில் கிட்டத்தட்ட 200 இற்கு மேல் இங்கு... இலங்கை மித்திரன் பத்திரிகையிலும் , முகடு இதழிலும், பிரசுரமாகியிருக்கின்றன்.

இலக்கிய தடாகத்திற்கும் மாதாந்த போட்டிக்கு அனுப்பி வருகிறேன்

பன்முகத் எழுத்தாளர் இணைந்து எழுதும் கவிதைத்தொடரிலும் எழுதினேன்

STS studio இணையம் எல்லா கவிதைகளையும் பதிவேற்றம் செய்கிறது.

**இணைய வெளியில் பதிவேற்றப்படும் பதிவுகள் காலத்தால் நிலைத்திருப்பது கடினம் எனும் ஒரு பார்வை நிலவுகின்றது அது பற்றி உங்கள் பார்வை?**

கடினம் என்பதே என் பார்வையும்

இதைப்பற்றி நான் என்ன சொல்ல?

**அப்படியானால் எதற்காக முழுக்கவிதைகளையும் இணையத்தில் பதிவேற்றுகின்றீர்கள்?**

நல்ல கேள்வி சிந்திக்க வேண்டிய விடயமாகிறது

**உங்கள் கவிதைகளை தொகுக்கும் முயற்சி ஏதும் உண்டா?**

நிச்சயமாக ஓர்நாள் தொகுப்பேன்

**கவிதைகள் அதிகம் எழுதுவதால் உங்களுக்கு பிடித்த கவிஞர் யார் என்று தெரிந்து கொள்ளாமா?**

வைரமுத்துவின் கவிதைகள் பிடிக்கும்... இப்போது நல்ல ஈழத்து கவிஞர்களின் படைப்புகள். வெளிவருவதால் அவர்களின் நூல்களை விரும்பி படிப்பேன். போருக்குபின் எழுந்த இலக்கியங்கள் மண்ணின் கதை தாங்கி வருவதால் அவர்கள் தரும் படைப்புக்கள் பிடிக்கும்

**போர் அழிவுக்கு பின் ஈழத்து இலக்கியப்படைப்புகளின் வாசக மன நிலையை சற்று விரிவாகத்தாருங்கள்?**

போரின் அவலங்களை நேரில் அனுபவிக்கவில்லை... வன்னி மண்ணை பார்த்ததில்லை. ஆனால் அவர்களின் படைப்புக்களை வாசித்தபோது நேரில் அனுபவித்த வேதனை-யை தந்து சென்றன. சில கவிதைகளை வாசித்து கண்ணீர் விட்டு இருக்கிறேன்.எனக்குள் உறங்கி இருந்த தமிழ்உணர்வை சில படைப்புக்கள் தட்டி எழுப்பின.. உதாரணமாக எதிர்வீட்டுநாயும் என்

ஏழைநாயும் என்ற கவிதைத்தொகுப்பு . கண்ணீர்வரவழைத்தது

**நீங்கள் வாழும் நாட்டில் தமிழ் புத்தகங்களை எவ்வாறு பெற்றுக்கொள்கின்றீர்கள்?**

இங்கு நடைபெறும் இலக்கிய ஒன்றுகூடல் நூல் அறிமுகங்களில் புலம் பெயர் படைப்புக்கள் கிடைக்கும்.. மற்றும்படி விடுமுறை-றயில் நாட்டிற்கு செல்லும் போது தேவையானவற்றை வாங்கிக்கொள்வேன். அஞ்சல் மூலமாகவும் நூல்கள் பெற்றுக்கொள்கிறேன். இங்கு நடைபெறும் கோயில் திருவிழாக்களில் இந்திய நாவல்கள் சஞ்சிகைகள் வாங்க கூடியதாக இருக்கும்.அவ்வாறாயின் நீங்கள் வாழும் சூழலிலும் ஒரு

**சிறந்த தமிழ் நூல் வாசக வட்டம் உள்ளது என்று எடுத்துக்கொள்ளளாமா ?**

நீங்கள் புறச்சமூகத்தை அவதானிப்பவர் எனும் ரீதியில் மூன்றாம் தலைமுறையிடம் வாசிப்பு மனம் உண்டா? அல்லது அதை பெற்றோர் ஊக்கப்படுத்துகிறார்களா இல்லையா?

ஆம் எடுத்துக்கொள்ளலாம்.பெற்றோர் ஊக்குவிப்பும் முக்கியமாகிறது. சில இங்குள்ள புத்தகங்கள் எம் பிள்ளைகளுடன் நூல் நிலையம் சென்று தேர்ந்தெடுப்போம். அந்த வகையில் ஊக்குவிப்பு தொடர்கிறது. இங்குள்ள பிள்ளைகள் நன்றாக வாசிக கும் பழக்கம் உடையவர்கள்.

**டென்மார்க்கில் நடைபெறும் இலக்கிய ஒன்றுகூடல்கள் எவ்வகையான கருப்பொருளை முதன்மையாக வைத்து பேசப்படுகின்றது?**

அண்மைக்காலங்களில் இங்கு நடை பெறவில்லை. நான் கலந்து கொள்ளவில்லை. பலவற்றுக்கு அழைப்பு கிடைத்தபோதும் அங்கு நூல்கள் அறிமுகமும்,

நூலாசிரியர் கௌரவிப்பும் என, நூல்கள் பற்றிய ஆய்வு நோக்குடனாக அமைகிறது...

**முகப்புத்தகத்தில் நீங்கள் எழுதுகவிதைகளுக்கு விருப்பமும் பின்னுட்டமும் கிடைக்கும்போது உங்கள் உணர்வு எப்படி பட்டதாத இருக்கின்றது?**

ரொம்ப சந்தோசமடைவேன். எனது நட்பு வட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் இல்லை 500 பேர் மட்டுமே. எழுத்துக்களுடன் சம்பந்தபட்டவர்களே அதிகம்.முகநூல் நட்புக்கள்தான் இந்தளவு எழுத தூண்டியவர்கள்.அவர்கள் காட்டிய ஆதரவே எனக்குள் மறைந்து இருந்த திறமையை வெளிக்கொணர வைத்தது என்பதில் எதுவித ஐயமும் இல்லை

**நன்றி உங்கள் கவிதைகள் விரைவில் நூலாக வாழ்த்துக்கள்**

சந்தோசம் .

நன்றி எனக்காக சில மணித்துளிகள் ஒதுக்கியமைக்கு. தமிழ் தாய்மொழி. எத்தனைமொழிபேசினாலும் அந்த இனிமையான உணர்வு தாய்மொழியை தவிர எதிலும் இல்லை.., தமிழ் வாழ்க!!!

அன்புடன்


ரதி மோகன்

ஓயாத கவியலைகள்

பத்தி

தீபன் இராமன்

# புலம்பெயர்ந்த தமிழனின் வாழ்வு எந்த மகிழ்ச்சியும் அற்ற திறந்த வெளிச் சிறை!



**பெரும்பாலும்** முட்டை போன்ற வடிவமைப்பைக்கொண்ட வீடுகள் அல்லது அடுக்கு மாடிக் கொங்ரீட் பொந்துகளில் தனிமைப்படுத்தப்பட்ட சிறைவாழ்க்கை புலம்பெயர் நாடுகள் வாழும் சாமானியத்

தமிழனின் நாளாந்த இருப்பு. முப்பது ஆண்டுகளின் பின்னர் கூட சுத்திகரிப்புத் தொழிலாளிகளாகவும், உணவகங்களிலும், பெற்றோல் நிலையங்களிலும் வேலைபார்த்து நாற்பது வயதில் நோய்களைச் சுமந்து முதுமையடைந்து விடும் மனிதர்களால் உருவானதே புலம்பெயர் சமூகம். ஒவ்வொரு மாதம் முடிவதற்கு முன்னரே வாடை-கையை அல்லது வீட்டிற்கான வங்கிக்கடனைச் செலுத்துவதற்கு மாரடிக்கும் புலம்பெயர்ந்த தமிழனின் வாழ்வு எந்த மகிழ்ச்சியும் அற்ற திறந்த வெளிச் சிறை.

எப்போதாவது நண்பர்கள் சந்தித்துக்கொள்ளும் போது மூக்கு முட்டக் குடித்துவிட்டு வீடு செல்வதோ, வங்கிகளில் கடன்பெற்று பூப்புனித நீராட்டு விழா, ஐம்பதாவது பிறந்ததினம் ஆலயத்திருவிழாக்கள்

போன்றவற்றைக் கொண்டாடுவதோ புலம்பெயர் நாடுகளில் மகிழ்ச்சியாகக் கருதப்படுகிறது. பல வருடங்களாக ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வாழ்பவர்கள் இந்த அவலமான வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டுவிடுகின்றனர்.

மனிதர்களோடு மனிதர்கள் உறவாடாத சிறை ஒன்றை விலைகொடுத்துத் தாமே வாங்கிக் கொண்டு அதற்கு முடங்கிப் போகின்றனர். எலும்பை உறையவைக்கும் குளிரில் சுமக்கமுடியாத உடையணிந்து சிறையிலிருந்து வெளியேவரும் மனிதன், நாளாந்த வாழ்க்கையை ஓட்டுவதற்காக சில

வேளைகளில் பதினைந்து மணி நேரங்கள் வரை வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்படுகின்றது.சில குடும்பங்களில் கணவன் மனைவி பிள்ளைகள் ஒன்றாக சந்தித்து கொள்வது ஒன்றாக உணவருந்துவது சில நாட்களில் மட்டும் என்ற கசப்பான உண்மையும் உண்டு

இரண்டாயிரம் யூரோ வரை ஊதியம் பெறுகின்ற ஒரு குடும்பத்திற்கு

வேலையையும் பணத்தையும் தவிர வேறு எந்த உலக அறிவும் கிடைக்காது. பிட்சா உணவகத்தில் வேலை செய்யும் ஒருவருக்கு கோதுமை மாவை எப்படி எல்லாம் ஊதிப் பெருக்கலாம் என்று தெரிகிற அளவிற்கு தான் வாழும் நாட்டின் வரலாற்றில் சிறு பகுதியாவது தெரிந்திருக்காது. தனது இரண்டாயிரம் ஊதியத்தில் வீட்டு வாடைகைக்காகவோ, வங்கிக் கடனுக்காகவோ 1200 யூரோக்கள் வரை தொலைந்துபோக மிகுதி 800 யூரோவில் ஒரு பகுதி மின்சாரக் கட்டணம் தொலைபேசி எனச் செலவழிந்து போக எஞ்சிய பணத்தில் உணவு உடை என்ற எஞ்சிய செலவு-களை முடித்துக்கொள்கிறார்.

இவைஅனைத்திலும்சிக்கனமாகவாழ்ந்தால்ஒருவருடத்தின்முடிவில் இலங்கைக்கோ அல்லது இந்தியாவிற்கோ செல்வதற்கான பயணச் சீட்டிற்குப் பணத்தைச் சேமித்துக்கொள்கிறார்.

இவற்றுள் அனைத்து உண்மைகளும் இலங்கையிலிருப்பவர்களுக்கு மறைக்கப்படுகின்றது. தாம் புலம்பெயர் நாடுகளில் மன்னர்கள் போல வாழ்வதாக பொய்யைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். இதன்மூலம்தங்களை தாங்களே பெருமைப்படுத்தும் அறிவீனமும் மறைந்த நிற்கின்றது

இலங்கை போன்ற நாடுகளில் ஐரோப்பா என்பது செல்வம் கொழிக்கும் சொர்க்கபுரி என்ற விம்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அங்கு வாழ்பவர்கள் மன்னர்கள் போல வாழ்க்கை நடத்துகிறார்கள் என்ற தவறான புனைவுகளின் கனவுக-ளில் மக்கள் வாழ்கிறார்கள். இந்த எதிர்பார்ப்பை புலம்பெயர் நாடுகளிலிருந்து இலங்கைக்கு விடுமுறைக்குச் செல்பவர்கள் திருப்திப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அதற்காக தாம் வாழும் வாழ்கையை மறைத்து ஒரு நாடக வாழ்வியலை தெரிந்தே செயல்ப்படுத்துகின்றனர் விடுமுறைக்குச் செல்லும் ஒருவருக்கும் இலங்கையிலிருக்கும் சாமானிய மனிதனுக்கும் இடையே தவறான புரிதல்களை அடிப்படையாககொண்ட

போலியான உறவு ஒன்று ஏற்படுகிறது. தனது வாழ்க்கையை முழுமையாக மறைக்கும் புலம்பெயர் மனிதனின் பொய் இந்த இருவருக்கும் இடையே ஒரு இரும்புத் திரையை ஏற்படுத்துகின்றது.

பயணச்சீட்டிற்கே ஒருவருடம் வருந்தும் ஒருவர் வங்கிக்கடனிலோ, கடன் அட்டையிலோ இலங்கையில் தனது நாடகத்தை நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார். முதலில் இலங்கை சென்று மற்றவர்களுக்குத் தனது நிலை-யை மறைப்பதற்காக கடன் அட்டைகளைப் பயன்படுத்தி விலையுயர்ந்த ஆடையணிகளை வாங்கிக்கொள்கிறார்.

பரிசுப் பொருட்களை வாங்கிக்கொள்கிறார். இலங்கை சென்றதும் உறவினர்களுக்குப் பண உதவி, கடா வெட்டி விருந்துவைத்தல் ,கோவில் திருவிழாக்களைப் பொறுப்பெடுத்தல் போன்றவற்றைக் கடன் அட்டைகளைப் பயன்படுத்தி மேற்கொள்கிறார்.

துப்பரவுத்தொழிலாளியாகபுலம்பெயர்நாடுகளில்வேலைசெய்யும் ஒருவர் இலங்கையில் காட்டும் 'கலரால்' பிரமித்துப்போகும் உள்ளுர்வாசிகள் புலம்பெயர் நாடுகள் தொடர்பாகக் கனவு-களில் ஈடுபட ஆரம்பித்துவிடுகின்றனர். மண்ணோடு பற்றற்ற ஐரோப்பியக் கனவுகளில் வாழுகின்ற உதிரிகளின் சமூகம் ஒன்று வட-கிழக்கிலும் உருவாகிவிடுகின்றது.

தாய் நாட்டில் விடுமுறையை முடித்துப் புலம்பெயர் நாடுகளை நோக்கித் திரும்பும் ஐரோப்பியத் தமிழன் தனது கடனட்டைக் கடனைத் திருப்பிச் செலுத்த இன்னும் பல ஆண்டுகள் ஆகிவிடுகின்றது. இதனாலேயே பல குடும்ப உறவுகளே சிதைவடைகின்றது.

தமது வாழ்க்கை தொடர்பான உண்மை நிலையை இலங்கைக்குச் செல்லும் ஒவ்வொரு ஐரோப்பியத் தமிழனும் தமது உறவினர்களுக்குச் சொல்லவேண்டும். அவர்களைக் கனவுலகத்திலிருந்து விடுவித்து சொந்த மண்ணையும் மக்களையும் நேசிக்கும் சமூகமாக உருவாக்க வேண்டும். வாழ்வதற்காக அடிமைகளாகும் கடன் சமூகத்தை நோக்கி தவ-றான விம்பத்தை அழிக்க வேண்டும். எங்கள் சொந்த மண் எல்லா வளங்களையும் கொண்டது, வானமும் வையகமும் ஒத்துழைக்கும் செல்வம் கொழிக்கும் பிரதேசங்கள் அவை. இவற்றைப் புரிந்துகொண்டால் ஒடுக்குமுறைக்கு எதிராகப் வாழ்ந்து போராடி வெற்றிபெறும் சமூகம் தோன்றும்.



ப.பார்த்தீபன்

**ஆசிரியர்:மு.வே.யோகேஸ்வரன்**
**பதிப்பகம்:**lorbaspublication




"அவங்கள் இல்லாத நாடு இப்படித்தான் போகும் "இது சாதாரணமாக எம்மவர் மத்தியில் ஏக்கத்துடன் பேசப்படும் பேச்சு எந்தக்காரணமும் இன்றி இவன் இதை எதற்க்காக இங்கு பதிவிடவேண்டும் என எண்ணத்தோன்று. அல்லது போனால் ஏதாவது ஒரு விமர்சனத்தை முன்வைக்கத்தோன்றும். இந்த
முரணில் இருந்து தான் எனக்கான கதவை தாழ் உடைக்க நினைக்கின்றேன். எல்லா உருவாக்கமும் இங்கிருந்தே தோற்றம் பெறுகின்றது அவற்றை நாம் பார்க்கும் பார்வையை கொண்டே, இருக்கும் நியதிக்குள் நல்லது, கெட்டது என வரையறுக்க முடிகின்றது இங்கு பார்வை என்பது அறிவின் முதிர்ச்சியின் ஊடே மனித குல நலனுக்கானதாக இருக்க வேண்டும்
"வாய்க்கால் கரையோரம்"என்ற நாவல் நண்பர் ஒருவர் மூலம் என் கைகு கிடைக்கப்பெற்றது
நாவலைத் தரும்போது நண்பர் கூறியவார்த்தை கட்டாயம் படியுங்கள் காலப்படிமம் ஒன்று கதையூடே உங்கள் முன் விரியும் என்றார் அந்த வகையில் அவருக்கு நன்றிகள்.
புத்தகத்தை வாசித்து விட்டு புட்டுப் புட்டு விரித்து எழுதும் அளவிற்கு என் வாசிப்பின் அனுபவம் ஒன்றும் முதுமை பெற்றதல்ல. ஆனாலும் உங்களோடு பகிர்ந்து கொள்வது வாசிப்பால் எழுந்த அனுபவத்தின் மீட்டலாகவே நினைக்கின்றேன். அது உங்களுள் ஒருதேடலை துண்டின் என் அனுபவமீட்டல் மெய்யானதே என்று எண்ணுவேன்.

வாய்கால் கரையோரம் என்ற இந்த பிரதியை முன்னட்டை படமும் பின்னட்டைப்படமும் முழுமையாக விளக்கி விடுகின்றது, என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை அந்த அளவிற்று அட்டை படத்தின் விம்பத்திற்கேற்ப சொற்கள் கோர்க்கப்பட்டு தெளிவாகக் கதை நகர்த்தப்படுகின்றது.

**"காட்டுப்பூனைக்கும் கலியாணம் என்றால் கொடுப்புக்குள் சிரிப்பாம்"என்ற பழபொழிபோல் காதல் என்றால் யாருக்குதான் விருப்பம் இராது அந்தவகையில் வாய்க்கால்**

கரையோரம் என்ற நாவல் காதலை மூலமாக வைந்து கதைக்களம் திறக்கம்படுகின்றது.திருகோணமலை மாவட்டத்தின் பண்குளம் என்ற எல்லைக்கிராமத்தின் குடியானவர்களின் கதையாக நகர்கின்றது.கதை நிகழும் காலப்பகுதி தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் ஆயுதப்போராட்டத்தின் ஆரம்பமாக இருக்கின்றது.

கதையின் நாயகன் செல்வம் தன் சொந்த ஊரைவிட்டு புறப்பட்டு பண்குளத்தில் குடி புகுந்த ஒரு கூழித்தொழிலாளியாக கதைக்குள் அறிமுகப்படுத்தப்பட்டாலும்.அவன் வாழ்வியல் குணங்கள் சமூகப்பொறுப்புள்ள போராட்ட குணமுள்ள மிகைப்படுத்தப்பட்ட கதாநாயகனாக நகர்கின்றான்.பண்குளம் சிங்கள எல்லைக்கிராமம் என்பதால் இராணுவத்தின் அத்து மீறல் பண்குளத்தின் மீது அடிக்கடி நடை பெறுகின்றது அத்து மீறும் இராணுவம் தங்கள் மீலேச்சத்தனத்தை பண்குளத்தின் மீது காட்டத் தவறவில்லை அதை கதை ஆசிரியர் வலியூட்டும் வார்தைகளால் சொல்கின்றார்.

ஒரு நாள் இராணுவ அதுமீறலின்போது ஐம்பதற்கு மேற்பட்ட தமிழ் உயிர்கள் பலி எடுக்கப்படுகின்றது.பெண்கள்மீது அத்துமீறல்கள் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. இராணுவம் குடி மனைக்குள் புகும் சந்தர்ப்பங்களில் மக்கள் கட்டை நோக்கி இடம் பெயர்கிறார்கள் அவ்வாரான சந்தர்ப்பம் ஒன்றில் இருநூறேக்கர் சொந்தக்கார முதலாளி சதாசிவத்தாரின் மகள் செவந்திக்கும் செல்வத்துக்குமிடையில் காதல் மலர்கின்றது.

கதலை ஊர் திரும்பியதும் செல்வத்திடம் கடிதம்மூலம் வெளிப்படுத்துகின்றாள் செவ்வந்தி.செல்வம் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க பல காரணம் தேடினாலும் செவ்வந்தியில் இயல்பு, வர்க்க முரண்களைத்தாண்டி காதலை ஏற்க வைக்கின்றது.ஒரு வேளை எல்லா இடங்களிலும் காதல் மலர்ந்தால் எல்லா பிரிவினைகளும் இல்லாமல் போயிருக்குமோ என்னவோ?

இருவருக்குமான காதல் சதாசிவத்தாருக்கு தெரிய வர வழமையான பல்லவி தான். செவ்வந்திக்கு அடித்து மண்டையை உடைத்து விடுகின்றார். இரத்தப்பெருக்கால் செவ்வந்தி மயக்கமுற திருகோணமலை மருந்துவமனைக்கு அழைத்துசெல்கின்றார் அங்கு செவ்வந்தியின் நிலை கவலைக்கிடமாகின்றது அவளுக்கு ஏற்றுவதற்கு இரத்தம் தேவைப்பட அவளுக்கான இரத்தக்குறுப்பில்லாமல் உயிருக்கு போராட செல்வம் இரத்தம் கொடுத்து காப்பாற்றி செவ்வந்தியின் தந்தையிடமிருந்து காதலுக்க் சம்மதம் பெறுகின்றார்.

இக்.காட்சிகள் எல்லாம் ஒரு சினிமாத்தனம்போல் இருந்தது என்பதில் எந்த முரணும் இக்காட்சி வாசகனுக்கு மாறுபட்ட அனுபவத்தை கொடுத்ததாக நான் உணரவில்லை.


காதலில் வெற்றி அடைந்த சொல்வம் தன் தமயனைபார்க மூன்று வருடம் கழித்து சொந்த ஊர் செல்கின்றார்.அங்கும் சிங்கள இராணுவத்தின் அத்துமீறல் கிராமத்தையே சிதைத்து சின்னா பின்ன மாக்கியது என்பதை அறிகின்றார்.இவர் மீண்டும் பண்குளம் திரும்புவதற்குள் பாடசாலை காலத்தில் செல்வத்தை ஒருதலையாகக் காதலித்த ஜீனத்என்ற முஸ்லீம் பெண்ணைக்கான்கின்றார். அவள் மணமாகி இரண்டு பிள்ளைகளின் தாயாகியும் செல்வத்தை மனதளவில் காதலிக்கும் பரட்சிப்பெண்ணாக செல்வத்தோடு முரண்படுகின்றார். அந்த போராட்ட குணத்திற்கு காரணம் செல்வம் பாடசாலைக்காலத்தில் வாசிக்க கொடுத்த புத்தகங்கள் தான்னென்றகருத்தை முன்வைக்கின்றார்.

இதற்கிடையில் பெண்கள மீதான முஸ்லீங்களின் அடக்குமுறைகளை அசிரியர் குறிப்பிடுட்டு காட்டத்தவறவில்லை அதற்காக தமிழ்சமூகத்தில் அடக்கு முறைகள் இல்லையா என்ற கேள்வியை ஆசிரியரிடம் கேட்டால் என்ன என்று தோன்றுகிறது.

செல்வம் மீண்டும் பாண் குளம் திரும்புகிறார். அங்கு செல்வத்துக்கும் செவ்வந்திக்கும் திருமணம் நிகழ்த்துவதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றது.ஆனாலும் செல்வம் தன் திருமண ஆடம்பரமின்றி நடைபெறவேண்டும் என்றே விரும்புகின்றார். அவ்வாறே நடைதிருமணமும் நடைபெற, செல்வத்தின் மீது மக்கள் வைந்திருந்த அன்பால் திருமணம் எதிர்பாராத விதத்தில் மக்கள் வெள்ளத்தால் நிறைகின்றது.

செல்வத்திடம் பொதுச்சேவை செய்யும் மனம் இயல்பாகவே இருந்தபடியால் அவருக்கும் தமிழீழ விடுதலை புலி உறுப்பினருக்கும் இடையில் நெருக்கம் ஏற்படுகின்றது. அவர்களுக்கு செல்வம் எவ்வாறு பங்களிப்பு செய்கின்றார் என்பதது கதைக்குள் தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது.கதையின் இறுதியில் செல்வமும் போராளியாகின்றார்.

நன் எழுதிய குறிப்புக்கள் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பார்வைக்கு விமர்சனம் தரக்கூடிய கதையாடல் வசனம் போன்று முழுமை யற்றதன்று.ஆனாலும் அங்காங்கே சிலவற்றை தொட்டுள்ளேன்.உங்கள் தேடல் மூலமே "வாய்க்கால் கரையோரம்"என்ற இந்த நாவலின் கதையாடலை உணர முடியும் அதற்குள் மறைந்திருக்கும் மெய் அரசியலை உணர முடிம். "காதல்,வீரம்,காமம்,"எல்லாம் கலந்த இயற்கை ஒழுங்கில் வாசிப்பு என்பது திறவுகோல். வாசிப்போம் கருத்தை கருத்தால் எதிர்கொள்வோம்.



கவிதைகள் சுபாரஞ்சன்

## மலராதா...

இழப்பின் வெற்றிடங்கள்
நிரப்பவில்லை
என்றாலும்..
அதிகாரங்களும்
அழுத்தங்களும்
தொலைய வில்லை என்றாலும்..

புரட்சி எதையும்
புரட்டிப் போடவில்லை
என்றாலும்.....
புதிய தலைமுறை
வாழ வேண்டுமென
தசாப்தங்களுக்குள்
புதைந்து போன
எலும்புக் கூடுகள்
எழுந்து நின்று
பிரார்த்தனை செய்கிறது..

## எங்கே நின்மதி

உயிர்கள் அடங்கி
உடமைகள் அழிந்து
கனவுகள் தொலைந்து
காலம் வீணாய்ப் போகிறதே...
அன்பு தொலைந்து
அடிமை பெருகி
யுத்தம் நிறைந்து
பூமி உடைந்து போகிறதே...

சித்தம் கலங்கி
நித்தம் வாழ்வில்
உயிரை உடைத்து
தசையை கிழிக்க
ரத்தம் பெருகி போகிறதே...

இயற்கையும் சீறி
இயல்புகள் மாற
அழிவுகள் துரத்த
அமைதி இழந்து போகிறதே ....



## ஆதிக்க சக்தியை

ஆதிக்க சக்தியை
அடிமைப் புரட்சியை
புரட்டிப் போட
புதுயுகம் படைக்கும்
சக்தியை கொடுத்துவிடு...

தசைப் பிண்டங்கள் என
நினைத்துப் புசிக்கின்ற
மனிதரின் உணர்வுகளை
அழிக்கும் சக்தியை கொடுத்துவிடு...

மண்ணிலே புதைகின்ற
உடலென்ற போதிலும்
மனிதனை மனிதாய் மதிக்கின்ற
புனிதத்தை கொடுத்திடு...

இழிகோல ஆட்சிகளும்
இன இழிவுகளும்
வரலாறாய்
தொடர்கின்ற விதி மாற்றும்
சக்கியைகொடுத்து விடு...

அணுவை கருவாக்கி
உயிராக உருவாக்கி
உலகத்துள் படைக்கும்
இவள் (தெய்வம்) நீ தானே
இவளுக்கொரு பாதுகாப்பை
கொடுத்துவிடு.....



கவிதை

யோ.புரட்சி – வள்ளுவர்புரம்.

பிரான்ஸ் மீதான தீவிரவாத தாக்குதல் செய்திகேட்டு எழுதியது....

# நெப்போலியன் தேசத்தில் நெருப்பூட்டியது யார்?

அணுகுண்டு தேசத்தில்
வெடிகுண்டு வைத்தது யார்?
வீட்டோ பவர் கொண்டவனை
வீழ்த்த நினைத்தது யார்?
பாசவாதிகள் நிறைந்த தேசத்தை
நாசவாதிகள் சிதைத்ததென்ன?
பாரிசின் நகருக்கு குருதியை
பரிசாய் கொடுத்ததென்ன?
திறமைவாதிகள் கொண்ட நகரில்
தீவிரவாதிகள் புகுந்ததேனோ?
வெள்ளைமாந்தர் செங்குருதியை
வீணே ஓட வைத்ததேனோ?
பட்டினியால் உலகு பரிதவித்தபோது
பாரிசும்தானே
அரிசி போட்டது.
சமாதானப்பயிர் வளர்க்க
அதுவும்தானே உரம் இட்டது.



உலக உணவுத் திட்டத்துக்கும்
ஊட்டச்சத்து பணியதற்கும்
இவர்கள் கரங்களும்தானே
ஏராளம் இடுகிறது.
அந்தக் கரங்களில்
மலர்களை வையாமல் ~ வெடி
மருந்துகளை வைத்தவன் யார்?
ஆயுதக் கரங்களின்
அழிப்பின் இலக்கில்
அகிம்சைக்கரங்கள் சிக்கியதேனோ?
சாப்பாட்டு விடுதியை
சடல விடுதி ஆக்கியவனே..
கால்பந்து மைதானத்தில்
உயிர்ப்பந்து ஆடியவனே
படமாளிகை தன்னை
வெடிமாளிகை ஆக்கியவனே..
ஃபிள் கோபுர மண்ணை
தீயில் போட்டு சிதைத்தவனே
மூளைச்சலவை செய்வதெல்லாம்
உயிர்ச்சலவை செய்யத்தானா?
ஐரோப்பிய காவல்துறையிடம்
அகப்படாமல் போகலாம்
ஆண்டவரின் அகோரப்பிடியில்
எப்படிநீ தப்பலாம்???

தொடர்கதை **பாலு**

# இலண்டனில் தோழர் பிள்ளையார்

**முதல் அத்தியாயம்**

அதிசயம். ஆனால் உண்மை என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்.

ஆம் கரவெட்டி தச்சன்தோப்பு பிள்ளையார் அகதியாக லண்டன் சென்றுவிட்டார். இச் செய்தி பரவ ஆரம்பித்ததும் கரவெட்டி மக்களால் அதை நம்பமுடியவில்லை.

ஏனெனில் இவ்வளவுகாலமும் எந்தக்கடவுள் தங்களைக்காப்பாற்றி வந்ததாக பெருமையாக அம் மக்கள் கூறிவந்தார்களோ அந்தக்கடவுள் இப்போது லண்டன் சென்றுவிட்டார், அதுவும் அகதியாகச்சென்றுவிட்டார் என்னும் போது அதை எப்படி அவர்களால் தாங்கிக்கொள்ளமுடியும்?

ஒப்பிறேசன் லிபறேசன் தாக்குதல் நடந்தபோது அகதியாக செல்லாத பிள்ளையார் , இந்தியராணுவம் அட்டூழியம் செய்தபோது அகதியாக செல்லாத பிள்ளையார் சந்திரிக்காவின் இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியபோது அகதியாக செல்லாத பிள்ளையார் இப்போது ஏன் அகதியாகச்சென்றார்?

கரவெட்டி மக்கள் எல்லோர் மனதிலும் எழுந்த கேள்வி இதுதான்.

இது குறித்து பிள்ளையாரின் பதில் என்னவெனில், "என் இனிய பக்தர்களே நான் அகதியாக லண்டன் செல்கிறேன். போராளி-களே தற்போது உங்களைக் பாதுகாப்பதால் இனி அவர்களே உங்கள் கடவுள்.;; என்பதுதான்.

பிள்ளையார் இவ்வாறு கூறுவதாக கோயில் வாசலில் போஸ்டர் ஒட்டப்பட்டிருந்தது.

ஆனால் பிள்ளையாருக்கு பூசை செய்துவந்த ஐயர் - "இயக்கப்பொடியன்கள் கோயில் அர்ச்சனைக் காசுக்கும் கடும் வரி அறவிட்டாங்கள். அது பிள்ளையாருக்கு பிடிக்கவில்லை. அதுதான் அவர் கோபித்துக்கொண்டு அகதியாக லண்டன் சென்றுவிட்டார்;; - என்று கூறிக்கொண்டிருந்தார்.

ஆனால் இயக்கப்பொடியங்களைப் பிடிக்காத சிலர் "இயக்கம் காசுகேட்டது. பிள்ளையார் கொடுக்கவில்லை. அதனால் இயக்கம் பிள்ளையாரைக் கடத்திக்கொண்டுபோய் வன்னியில் அடைத்து வைத்துவிட்டு இப்படிக் கதை கட்டுறாங்கள்;; என்று குசு குசுதுக்கொண்டிருந்தார்கள்.
இதில் எது எந்தளவு உண்மை என்பது புரியாமல் கரவெட்டிமக்கள் குழம்பிப்போய் இருந்தார்கள்.

கரவெட்டிமக்கள் இப்படிக் குழம்பிக்கொண்டிருக்க அது பற்றி எவ்வித அக்கறையுமின்றி பிள்ளையார் லண்டனில் தனது அகதிப்பதிவுகள் பற்றி மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார். தனது பக்தன் ஒருவன் சொலிசிற்றராக இருப்பதை அறிந்து அவரிடம் சென்ற பிள்ளையார் வாசலில் இருந்த வரவேற்புப் பெண்ணிடம் தனது வருகையைத் தெரியப்படுத்தினார்.

"ஐயா இப்போது மிகவும் பிஸி. முதலில் இந்த பச்சை போமில் கையெழுத்து போடுங்கோ" என்றாள் அப் பெண்மணி.

பிள்ளையாரும் பச்சை போம் மகிமை தெரியாமல் மிகவும் சிரத்தையாக கையெழுத்துப்போட்டுவிட்டு சொலிசிஸ்ரரை பார்க்க காத்து இருந்தார். உள்ளே சொலிசிற்றர் தான் அடுத்து வாங்க இருக்கும் ஆறாவது வீடு பற்றி வீட்டு புரோக்கர் ஒருவருடன் ரெலிபோனில் பேசிக்கொண்டிருந்தார். இதை அறியாத பிள்ளையார் சொலிசிற்றர் ஏதோ அகதி வழக்கு விடயமாக பிஸியாக இருக்கிறார் என எண்ணிக்கொண்டு வெளியே ஒட்டப்பட்ட சொலிசிற்றரின் சாதனைப்பட்டியலை படித்துக்கொண்டிருந்தார்.

தான் எத்தனை பேருக்கு அகதி அந்தஸ்து பெற்றுக்கொடுத்தேன் என்பதை பட்டியல் போட்டு ஒட்டியிருந்தார் சொலிசிற்றர். ஆனால் அவரால் அகதி அந்தஸ்து பெற்றுக்கொடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட நிராகரிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையே அதிகம் என்பதை முழுமையான பட்டியல் ஒட்டப்பட்டிருந்தால் அதைப் படிப்பவர்கள் எல்லோராலும் புரிந்துகொள்ள முடியும்.

பல மணிநேரக் காத்திருத்தலின் பின்னர் பிள்ளையார் உள்ளே அழைக்கப்பட்டார்.

உள்ளே சென்ற பிள்ளையார் பொறுக்க முடியாமல் உடனேயே தன் கதையைச் சொல்ல ஆரம்பித்துவிட்டார்.

இதனால் ஆத்திரம் கொண்ட சொலிசிற்றர் பிள்ளையாரைப்பார்த்து "நீர் சொலிசிஸ்ரரா அல்லது நான் சொலிசிற்றரா? கொஞ்ச நேரம் வாயை மூடிக்கொண்டு சும்மா இரும். உம்முடைய கதையைச் சொன்னால் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இப்போதைய சூழ்நிலையில் நீர் ஈபிடிபி இயக்கத்தில் இருந்ததாகவும் உம்மை புலிகள் மிரட்டியதால் பயந்து இங்கு வந்துவிட்டதாக கூறும். அப்பதான் சரிவரும்"என்றார்.

பொய் சொல்வது பிள்ளையாருக்கு பிடிக்கவில்லை என்றாலும் இது இங்கு சகஜமானது என்பதாலும் அகதி அந்தஸ்து கிடைத்தால் போதும் என்ற நிலையில் சரி என்று தலையாட்டிக்கொண்டிருந்தார்.

அகதி அந்தஸ்து கிடைக்கப்போகிறது என்ற நம்பிக்கையில் சிறிது சந்தோசம் கொண்ட பிள்ளையார் சொலிசிற்ரரைப் பார்த்து "அப்ப நான் போயிட்டு வாரேன்" என்றார்.

"ஓமோம் சந்தோசமாக போயிட்டு வாரும்.ஆனால் அடுத்த முறை வரும்போது மறக்காமல் 600 பவுண்ஸ் காசு கொண்டு வாரும்."என்றார் சொலிசிஸ்ரர்.

இதைக்கேட்டதும் நெஞ்சில் இடி விழுந்தது போல் இருந்தது பிள்ளையாருக்கு.

"ஏன் 600 பவுண்ஸ்? அதுதான் பச்சைபோமில் கையெழுத்துப் போட்டுத் தந்திருக்கிறேன். எனக்காக அரசாங்கம் பணம் தரும்தானே!" எனக்கேட்டார் பிள்ளையார்.

அதற்கு சொலிசிற்ரர் " அட்வகேட்டுக்குப் பணம் கொடுக்கவேண்டும். நிறைய செலவு இருக்கு. விரும்பினால் தாரும். இல்லையேல் வேறு சொலிசிற்ரரிடம் போய் கேஸ் கொடும்"என்றார். அத்துடன் "களவாக வேலை செய்யும். அப்போது உமக்கு பணம் தருவது கஸ்டமாக இருக்காது" என்று வழியும் சொல்லிக்கொடுத்தார்.

முதலில் பொய் சொல்லச்சொன்னார். பின் களவாக வேலை செய்யச்சொல்கிறார். இன்னும் இப்படி என்னென்ன செய்யச்சொல்லப்போகிறாரோ தெரியவில்லை என ஏங்கிய பிள்ளையார் காக்கிச் சட்டை போட்ட பொலிசும் கறுப்புக்கோட்டு போட்டசொலிசிற்ரரும் உலகம் பூராவும் ஒரே குணம்தான் என அறிஞர் ஒருவர் கூறியது உண்மைதான் என மனதிற்குள் எண்ணிய வண்ணம் புறப்பட்டுச்சென்றார்.

சொலிசிற்ரர் அலுவலகத்தை விட்டு வெளியேறி ரயில் நிலையத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த வேளை அருகில் கலர் பல்புகள் எரிந்துகொண்டிருந்த சிறிய கடையை திரும்பிப்பார்த்த பிள்ளையாரை அரை குறை ஆடையுடன் நின்றிருந்த வெள்ளைக்காரப்பெண் ஒருத்தி சிநேகபாவத்துடன் சிரித்தாள்.
உள்ளே வரும்படி சைகை காட்டினாள்.
தன்னைப்பார்த்து ஒரு பெண் அதுவும் வெள்ளைக்காரப் பெண் சிரித்ததும் குஷுஷி கொண்ட பிள்ளையார் ஒருவேளை இவள் விபச்சாரப்பெண்ணாக இருக்குமோ என எண்ணி தயங்கினார். எனினும் இங்கிலாந்தில் விபச்சாரம் சட்டப்படி குற்றம் என்பதால் இவள் அப்படிப்பட்ட பெண்ணாக இருக்க வாய்ப்பில்லை என நம்பிக்கொண்டு உள்ளே சென்றார்.

உள்ளே சென்ற பிள்ளையாரை இறுக்கி அணைத்து முத்தம் கொடுத்து வரவேற்ற அப் பெண் சைனிஸ் மஸாஜ் வேண்டுமா அல்லது பிரெஞ்சு மஸாஜ் வேண்டுமா என்றாள்.

இது மஸாஜ் சென்ரர் பெயரில் நடத்தப்படும் விபச்சாரவிடுதி என்பதையோ அவள் விபச்சாரத்திற்குத்தான் தன்னை அழைக்கிறாள் என்பதையோ புரிந்துகொள்ளாத பிள்ளையார் "சைனிஸ் சாப்பாடு கேள்விப்பட்டிருக்கிறேன். அது என்ன சைனிஸ் மஸாஜ்?" என்று கேட்டார்.

பிள்ளையார் இவ்வாறு கேட்டதும் இது கூடத்தெரியாமல் இந்த லண்டனில் ஒருவர் இருக்கிறாரே என எண்ணிச் சிரித்தவள் இதன்மூலம் இவர் ஊருக்குப் புதிசு என்பதைப் புரிந்துகொண்டாள்.

"விரும்பினால் நீர் என்னுடன் பணம் தந்து செக்ஸ் உறவு வைத்துக்கொள்ளலாம்" என்று வேறு வழியின்றிப் பச்சையாகவே சொன்னாள்.

இதைக்கேட்டதும் ஆத்திரம் கொண்ட பிள்ளையார் "என்னைப்பார்த்தால் அப்படிப்பட்ட ஆம்பிளையாகவா தெரியுது? என்னை யார் என்று
தெரியுமா? நான் ஒரு தமிழன். அதுவும் ஈழத் தமிழன். கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து மூத்தகுடி என் குடி. ஒருவனுக்கு ஒருத்தி எங்கள் பண்பாடு.பெண்களை தாயாக மட்டுமல்ல தெய்வமாக வணங்குவதும் எங்கள் கலாச்சாரம். அப்படிப்பட்ட என்னை இப்படி நீ அழைத்தது எவ்வளவு பெரிய தவறு என்பது உனக்குப் புரியுமா?" எனக்கேட்டார்.

அதற்கு அவள் " ஓ ! நீ ஒரு சிறீலங்கன் தமிழனா? நேற்று ஒரு சிறீலங்கன் தமிழன் இங்கு வந்தான். அவன் மூக்கு முட்டக் குடித்திருந்தான். தான் ஏழு வருடங்களுக்கு மேலாக மனைவி பிள்ளைகளை விட்டுப் பிரிந்து இருப்பதாகவும் தனது அகதி வழக்கு இன்னும் முடிவடையாததால் அவர்களை இங்கு அழைக்கவும் முடியவில்லை தன்னால் சென்று பார்க்கவும் முடியவில்லை என்று கூறி அழுதான். ஒரு நிமிடம் கையை விட்டால் ஓடிச்சென்று இன்னொரு பெண்ணைப் பிடிக்கும் ஆண்கள் நிரம்பிய இந்த லண்டன் நாட்டில் ஏழு வருடங்கள் பிரிந்திருந்தும் தன் மனைவி பிள்ளைகள் மீது இந்தளவு பாசம் வைத்திருக்கிறானே இவன் என ஆச்சரியப்பட்டேன். அவன் மீது எனக்கு ஏற்பட்ட இரக்கத்தினால் பணம் பெற்றுக்கொள்ளாமல் உறவு கொள்ள இணங்கினேன். ஆனால் அவன் ஒரு மிருகம்போல் நடந்துகொண்டான். முரட்டுத்தனமாக கடித்துக் குதறினான். அதுமட்டுமல்ல இறுதியில் எனது கிரடிக்கார்ட்டு உட்பட பொருட்களையும் களவெடுத்துக்கொண்டு ஓடிவிட்டான். நான் என் வாழ்க்கையில் இதுவரை எத்தனையோ நாட்டுக்காரர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் சிறீலங்கன் தமிழன் போல் மோசமான ஒரு மனிதமிருகத்தை நான் பார்க்கவேயில்லை" என்றாள்.

அவள் கூறியதைக்கேட்டு தலை குனிந்த பிள்ளையார் எதுவும் பேச முடியாமல் மௌனமாக அவ் இடத்தை விட்டுவெளியேறினார்.

எமது தமிழ்இளைஞர்கள் இவ்வாறு மாறியதற்கு என்ன காரணம் என சிந்தித்த வண்ணம் ரயில் நிலையத்தை நோக்கி சென்று கொண்டிருந்தார் பிள்ளையார்.

# பேசும் படம்



தலை விதியா
நிலையின் சதியா
தட்டறியா கைகள்
தவமிருந்து
நட்டமரம்போல்
நாலுமழை பார்க்கும்
காலம்!

தொலைத்த வாழ்வை
தோண்டும் போது
தோகைபோல் விரிகிறது
கோரப்படங்கள்
இழைத்த கொடுமை
எரியும் போது
சிவந்து தெரிகிறது
பதிந்த நகங்கள்!

இறைவா நீயறிவாய்
என் நொண்டிவிரல்
தீண்டும்
நொந்த ரணங்களை
நீ அறிவாய்!

வந்துவிட்டோம்
இந்த மண்ணில்
வதைகளை
கண்டுவிட்டோம்
உண்டுவிட்டோம்
உயிர்ப்பிணங்களை
என்று விட்டோம்
எம் உரிமையை
ஈசல்தானா எம் வாழ்க்கை...

ஜெ.ஈழநிலவன்

வாழ்வா சாவா
இது பனிக்கால
பகலல்ல
கிளர் மேவ
கிலி வந்து பனிமறைய!

வாழ்ந்தோம்
வாழ்வதற்கா
வந்தோம்
இது நிறைவேறிய
சதி
சாவு எங்கள்
சட்டையோடு
ஒட்டியிருப்பது!

கீற்றும் கிலுகிலுப்பு
ஆட்டமறந்திற்று
வேற்றுகொலையால்

கால் சில்லுருண்ட
தேசமெல்லாம்
சிதைவுகள் புரள்வதும்
கனவுகள் சுமந்த
தேகமெல்லாம்
குறையுடல் தெரிவதும்
கோலத்தின் சாட்சி!

இன்னும் இருக்கு
எங்கள் மண்ணில்
ஈரக் கண்ணில்
இருண்ட வானும்
மருண்ட மேகமும்!

ஜெ.ஈழநிலவன்

**அவர்கள் வீசிய**
**ஷெல்லிற்கு**
**கண்கள் மட்டுமல்ல...**
**இதயமும**
**இல்லாமல் போனது....**
**அவை எங்கள்**
**இருப்பிடங்கள்**
**தேடி வந்த நேரம்**
**அதை அனுப்பியவன்**
**கண்கள்எங்கள தேடியது...**
**அதற்கு உயிர்பசி...**
**அவனுக்கு உடல்பசி...**
**எங்களுக்கோ**
**வாழ. பசி...**
**பதுங்குக்குழிக்குள்**
**பதுங்கியும்**
**கால் போனது....**
**கற்பும் காலமும்**
**பாக்கி வைத்து**
**போரும் கடந்தபோது**
**வாழ்தலின்**
**தேடல் நோக்கி**
**கைககளால்**
**நடக்கிறேன்...**

**ஆரவார முரசறைய யாருடைய**
**அகந்தைக்குகோ**
**என்னுடைய**
**ஒற்றைகால்**
**அனாதையானது**

Alex Josara

கதை அஞ்சரன்

# பாசத்தின் விலை!



என்னடா தம்பி வேலை எப்படி போகுது , பருவாயில்லை அண்ணே சும்மா போகுது. என்ன நீங்க ஒரு மாதிரி இருக்கிறீங்க ராஜா அண்ணே வழமையான முகம் இல்லை ஏதாவது பிரச்சினையா அல்லது முதலாளி பேசிகீசி போட்டானே சொல்லுங்க , ஒன்றுரில்லை வேலை வீடு பிள்ளைகள் படிப்பு என நாங்கள் வாழ்க்கையை ஒரு வட்டத்தில் வாழ்த்து தொலைக்கிறது ,ஆனால் இப்ப உள்ள பொடியள் தாங்கள் நினைச்சதை செய்து கொண்டு குடும்பம் உறவு பாசம் என்றால் என்ன என்று தெரியாமல் வாழுதுகள் ,எல்லாம் காலம் மாறி போனதால அல்லது உறவுகள் இடத்தில நெருக்கம் குறைச்சு போனதால என்று தான் எனக்கு விளங்கவில்லை . என்னத்த அண்ணே சொல்லுறது நாங்களா வந்து ஒரு பெட்டியில் விழுந்து போனம் ஏறவும் முடியாது

வெளிய குதிக்கவும் முடியாது நாலு பக்கமும் மாறி மாறி நடக்கவேண்டியது தான் ,இங்க பிரச்சினை என்று வேறு வேலைக்கு போனால் அங்க வேறு பிரச்சினை இருக்கும் சரி விடுங்க இதுகளை கதைச்சா தலை வெடிக்கும் ,

உண்மைதான்டா தம்பி ஆனால் ,

ஆனால் என்ன அண்ணே சொல்லுங்க நீங்க எதோ வேற பிரச்சினையை வைச்சு கதைப்பது போல இருக்கு எனக்கு சொல்ல விருப்பம் இல்லை என்றால் விடுங்க நான் கேட்கமாட்டான் நேரம் ஆகுது வீட்டுக்கு போங்க அக்கா பார்த்துக்கொண்டு இருப்பா .

உனக்கு சொல்லுறதில என்னடா இருக்கு நீ எனக்கு ஒரு சகோதரம் போல ,இல்லை எங்கட மூத்த அக்காவின் பிள்ளைகளை இவன் தம்பி ரவி தான் இவ்வளவு காலமும் பார்த்தவன் ,

ஓம், ஓம் எனக்கு தெரியும். நீங்கதானே அவரை இங்க கூப்பிட்டு விட்டது

ம்ம் அவனும் பன்னிரண்டு வருடம் இயக்கத்தில இருந்திட்டு வெளியில வரும்போது வயதி முப்பது தாண்டி போட்டுது ,நானும் எவ்வளவு காலம் பார்க்கிறது பிள்ளைகள் வளர வளர தேவைகள் கூடுது அதனால தான் அவனை கடன்பட்டு கூப்பிட்டு விட்டன் ,வந்தவன் எனக்கு காசு தரவேணாம் நீ மூத்த அக்காவின் பிள்ளைகள் மூன்றையும் வளர்த்து விடு என்று நான் சொல்லி போட்டு விடுட்டுட்டன் அவனும் சரி அண்ணை என்று இவ்வளவு காலம் பார்த்தவன் . கடைசி பெடியன் பிறந்து பத்தாம் நாள் அத்தான் கிபீர் அடிச்சு செத்து போனார் ,அந்த மூன்று பிள்ளையும் அவள் வளர்க்க பட்ட கஷ்டம் எனக்கு தான் தெரியும் ,நான் இங்க இருந்து காசு கொடுத்து விட்டாலும் அது போயிட்டா கொடுத்து விட்ட ஆள் கொண்டுபோய் கொடுத்து இருக்குமா என்று எல்லாம் இரவு பகல் எல்லாம் யோசிப்பன் ,உனக்கே தெரியும் அப்ப ஒரு தொடர்பும் இல்லை வன்னிக்கு கதைக்க .

உண்மைதான் அண்ணே போன் கதைக்க வேணும் என்றால் கூட முதல் இரண்டுநாள் வந்து சொல்லி அதுக்கு பிறகு போய் காத்திருந்து கதைக்க வேணும் ம்ம் அப்படி தான் இருபது வருடத்தில் அக்காவோட இரண்டு தரன் தான் கதைச்சனான் எடா ..

சரி அதை விடு ,இப்படி இவனுக்கும் வயது நாற்பது ஆகுது இனி எங்க கலியாணம் என்று அவனுக்கும் வெறுப்பு வந்திட்டு, பிறகு இல்லை

கடைசி காலத்தில தனிச்சு போடுவான் என்று நான் தான் பிடிவாதம் பிடிச்சு, கலியாணம் பேசி ஊரில தெரிச்ச பிள்ளை தான் நாலு மாதம் முதல் இந்தியாவில போய் கட்டீட்டு வந்தவன் ..

ஓம் ஓம் ஒருக்கா படம் போனில காட்டின நினைவு இருக்கு இப்ப என்ன அவைக்குள்ள என்னமும் பிரச்சினையா

சீ சீ அவள் தங்கமான பிள்ளை ,பிரச்சினை என்ற அக்காவின் பெடி படிச்சவன் இனி குடும்பத்தை பார்ப்பான் ,வளர்த்திட்டான், வேலைக்கு போக தொடங்கிட்டான், என்னும் துணிவில தான் நான் சந்தோஷமா இருந்தான் ,பட்ட துன்பங்கள் துயருகள் எல்லாம் மறந்து, அடுத்தவள் பொம்பிளை பிள்ளை அதை அவன் கரை சேர்ப்பான் என்று இருக்க நேற்று அக்கா போன் பண்ணி அழுகிறா என்ன நடந்தது என்று நான் கலவர பட்டு பயந்து போனேன் ...

ஏன் அண்ணே என்னாச்சு ,ஏதாவது வாகனத்தில் அடிபட்டு போட்டானே பெடியன் ..

கோதாரி அப்படி போய் இருந்தாலும் நான் சந்தோஷப்பட்டுருப்பன் அந்த மூதேவி இப்ப தான் இருபத்தி ஒரு வயது அவையின் வீட்டில் இருந்து மூணாவது வீட்டில இருந்த ஒரு பெட்டைய கூட்டிக்கொண்டு ஓடிட்டாம் என்று சொல்லி முடிக்கும் போது .

இவன் குடும்பத்தை பார்ப்பான் என்று நான் இருக்க ,இவன் தனக்கு ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக்கொண்டு போயிட்டான் என கண்களில் நீர் அணைக்கட்டில் நிறைவது போல முட்டி நிக்க கதையை சொல்லி முடித்தார். யோசிச்சு பார் அப்பு நானும் கடன் ,வந்த தம்பி உழைச்சு கொடுத்து, படிப்பித்து, வீடு கட்டி கொடுத்து,மோட்டார் சைக்கிள் முதல் கொண்டு வாங்கி கொடுத்து தன்னுடைய வாழ்க்கையை நாற்பது வயதில் தான் ஆரம்பிக்க போக இந்த நாய் இந்த வேலையை செய்து இருக்கு .

விரும்புறது கலியாணம் கட்டுறது எனக்கு ஒரு பிரச்சினை இல்லை கொஞ்சமாவது குடும்பத்தை யோசிச்சு பார்த்தியா ,தங்கச்சி இருக்கு தம்பி இருக்கு படிப்பிக்க வேணும் அம்மா இவ்வளவு காலம் விதைவையாக இருந்து எங்களை வளர்த்து ஆளாக்கி விட நாங்க இப்படி தெறிக்கும் வேலையை செய்யலாமா என்று .

சரி அண்ணே அழவேணாம் அவன் பார்ப்பான் குடும்பத்தை மாமா ஆக்கள் எப்படி கஷ்டபட்டு தன்னை வளர்த்தவர்கள் என்று விளங்காமல் இருக்குமா ,சரி நீங்க அழாமல் இருங்க எல்லாம் நல்லபடியா நடக்கும் என்னும் ஆறுதல் வார்த்தைகளை தவிர என்னால் அவருக்கு வேறு என்னத்தை தான் கூற முடியும் .

Sugirtha Shanmuganathan




# சதுரங்கம்

மூலம் - அல்பானியா

காத்திருக்கின்றமை தெரிகிறது.
நிலத்தின் வாசனை,
கடிகாரமற்ற சுவரைக் கொண்ட
எனது தாய் வீட்டை நினைவூட்டுகிறது.
கல்லறை முகப்பில் பொறிக்கப்பட்டிருக்கும்
முகவரியைத் துடைத்துப் பார்க்கின்றன
எனது கைகள்.
வருடங்கள் - முழங்காலிலுள்ள சிறிய காயத்தைப்போல
காதல் - இப்போதெல்லாம்
அது ஒரு ரோசாச்செடியின் முள் குத்தும் வலியைவிடக்
குறைவாகவே எரிகின்றது.
இடுகாட்டின் வாசலில்
சதுரங்கம் விளையாடிக்கொண்டிருக்கிறான்
இடுகாட்டுக் காவலன்.
தனக்குத் தானே எதிராக!

இப்பொழுது இலையுதிர்காலம்.
மழையில் நனையும் பளிங்குக் கற்களின்
நாளங்கள் புடைத்துக் கிடக்கின்றன.
நான்குவிரலகல இடைவெளி மட்டுமே கொண்டு,
மூடப்பட்ட புகையிரதக் கடவைக்குமுன்னால்
காத்திருக்கும் வாகன வரிசை போல
வரிசையாகவும் கோர்வையாகவும் கிடக்கின்றன.
என் உறவினர்களின் கல்லறைகள்.
போர் முடிந்துவிட்டது .
அவர்கள் எல்லோரும்
தமது விரல்போல அணிந்திருந்த
சூட்டைத் தாங்கும் கையுறைகளை
இனிமேலும் தேவையில்லையென்று
தூக்கியெறிந்து விட்டார்கள்.
வெளியேயிருந்து பார்க்கையில்
ஒரு சில அறியாத மனிதர்கள்
அந்தத் தெருவின் மறுகரையைச் சென்றடையக்,
கடந்து செல்லும் தொடருந்திற்காகக்




எனது எட்டு வருட சிறை வாழ்க்கையை முடித்துக்கொண்டு வேலூர் சிறப்பு முகாமில் இருந்து 30.04.1998 அன்று நான் வெளியேறியபோது, அங்கு அடைக்கப்பட்டிருந்த சக அகதிகளிடம் விடை பெற்றுக் கொண்டிருந்த வேளை, எனது கரங்களைப் பற்றிக்கொண்ட 8 வயது சிறுமி ஒருத்தி "எல்லோரும் விடைபெறும் போது கவலைப்படாதே, உன்னை விரைவில் விடுதலை செய்ய உதவுவேன் என்பார்கள். ஆனால் அது என்னை ஆறுதல்படுத்த அவர்கள் கூறும் வார்த்தைகள் என்பதை அறிவேன். ஆனால் நீங்கள் அவ்வாறு கூறாவிட்டாலும் நீங்கள்தான் எனக்கு நிச்சயம் உதவுவீர்கள் என்று நம்புகிறேன்" என்று கூறிய அந்த வரிகள் இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. தற்போது அந்த சிறுமி விடுதலையாகிவிட்டாள் என்றாலும் அந்த சிறுமி என்மீது வைத்த நம்பிக்கையின்படி என்னால் இயன்றளவு சிறப்புமுகாம் அகதிகளின் விடுதலைக்கு குரல் கொடுத்து வருகிறேன்.

நான் சிறப்புமுகாமில் அடைத்து வைக்கப்பட்ட வேளை (1991-1998) எனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராக எனது தோழர்கள் பொழிலன், முகிலன், சுகுமார் போன்றவர்கள் குரல் கொடுத்தார்கள். அரசியல் தலைவர்களான ராமதாஸ், திருமாவளவன் போன்றவர்களும் குரல் கொடுக்க இவர்கள் வழி சமைத்தார்கள். அது மட்டுமன்றி புரட்சிகர இதழ்களான 'கேடயம்', 'புதிய ஜனநாயகம்', 'முன்னோடி' போன்றவையும் சிறப்புமுகாம் கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுத்தன.

கலைஞர் கருணாநிதி அவர்களால் 1990ல் ஆரம்பிக்கப்பட்ட சிறப்புமுகாம் என்னும் சித்திரவதை முகாம் இன்னும் மூடப்படவில்லை. அதில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகள் விடுதலை செய்யப்படவில்லை. இது குறித்து அண்மையில் தமிழ்த்தேச மக்கள் கட்சியின் 'விடுதலை அறம்' என்னும் இதழில் தொடர் கட்டுரைகள் எழுதியிருந்தேன். அதனைப் படித்த பலரும் இவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடும்படி கேட்டுக் கொண்டார்கள். அந் நூல் எதிர்காலத்தில் சிறப்புமுகாம் பற்றிய ஒரு ஆவணமாகத் திகழும் என்றும் கூறினார்கள். அவர்களின் வேண்டுகோளின்படி இந்நூலைத் தொகுத்து வெளியிடுகிறேன்.

இந்நூல் எந்தளவுக்கு ஒரு ஆவணமாக எதிர்காலத்தில் பயன்படும் என எனக்கு தெரியவில்லை. ஆனால் சிறப்புமுகாமில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அகதிகளின் விடுதலைக்கு சிறிதளவேனும் இந்நூல் உதவுமேயாயின் அதுவே எனக்குப் போதும். ஏனெனில் எனது நோக்கமும் அதுவே.

இந் நூல் வெளியீட்டுக்கு உதவிய அனைவருக்கும் எனது தோழமை கலந்த நன்றிகள்.

தோழர்.பாலன்
லண்டன்
12.08.2015

கவிதை

வண்ணா சேர்

# சிறைப்பறவைகள்

சிறைப்பறவைகள்
சிறகுவிரிக்குமா
கம்பிகள் பின்னே
தொங்கிடும் முகங்களில்
நம்பிக்கை மலர்கள்
மலர்ந்திடுமா
கங்கைகள் பாயும்
எம் மங்கையர்
கண்களில்
ஆனந்தப் பேரொளி
வீசிடுமா
குழவிகள்
வாழ்வினில்
குதூகலம் பொங்கிட
தந்தையர்
வீடது சேருவரா
பெற்றவர் மனங்களில்
குமுறிடும் துயரது
காலைப்பனிபோல்
மறைந்திடுமா
சுற்றங்கள் கூடி
மகிழ்ந்து உலாவிட
பறவைகள் கூடது
ஏகிடுமா!!



# காந்தீயம் டேவிட் ஐயா நிகழ்வு பற்றிய பதிவு

அசோக் கண்ணமுத்து
(இனியொரு)



காந்தீயம் டேவிட் ஐயாவின் நினைவுப் பகிர்வும் , கலந்துரையாடலும், நூல் வெளியீடும் சென்ற ஞாயிற்றுக்கிழமை (06.12.2015) பிரான்சின் தலைநகர் பாரீஸ் லாச்சப்பல் செயின்ட் புறுனோ மண்டபத்தில் இடம்பெற்றது. பல்வேறு அரசியல் நம்பிக்கை கொண்டவர்கள், சமூக செயல்பாட்டாளர்கள், நண்பர்கள் பொது மக்கள் என மிகத் திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்ச்சிக்கு காந்திய சமூக செயற்பாட்டாளர் இ. பூபாலசிங்கம் அவர்கள் தலைமை தாங்கினர். 'இலங்கை தேசிய இனப்பிரச்சனையும் டேவிட் ஐயாவும்' என்ற தலைப்பிலான உரையை பி.ஏ.காதர் அவர்கள் நிகழ்த்தினார்கள்.டேவிட் ஐயாவைப் பற்றி தொகுக்கப்பட்ட 'அர்ப்பண வாழ்வில் வலிசுமந்த மனிதன்' என்ற நூலும் வெளியிடப்பட்டது.

மிகவும் நட்புணர்வுடனும் தோழமையுடனும் நடைபெற்ற கூட்டத்தில் இறுதியில் நடைபெற்ற கலந்துரையாடலில் பார்வையாளர்களும் ஆர்வமுடன் கலந்துகொண்டு கருத்துக்களை முன்வைத்தனர்.

இந் நிகழ்வில் உரையாற்றிய நண்பர்களின் பேச்சின் சிறுகுறிப்புக்கள் பின் இணைப்பாக இங்கு தரப்பட்டுள்ளது

மணி நாகேஷ்



**இ. பூபாலசிங்கம்**

டேவிட் ஐயா இராஜசுந்தரம் ஆகியோர் காந்தீய அமைப்பை உருவாக்கி பாதிக்கப்பட்ட மலையக மக்களை எமது வடகிழக்கு பிரதேசங்களில் குடியேற்றி அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை செய்து, எமது தமிழ் பிரதேசங்களை காப்பாற்றிய மனிதர்கள்.அதுபோல் வடகிழக்கு பிரதேசங்களிலுள்ள எல்லைக் கிராமங்களுக்கு அரணாக பண்ணைகள் குடியேற்றத் திட்டங்களை திட்டமிட்ட தன்னிறைவு பொருளாதாரத்துடன் சிறப்புற செய்தார்கள்.

**ஜென்னி**

நானும் திருமலையில் தொண்டராசிரியராக 1979லிருந்து 1983 வரை செயற்பட்டதால் இந்த மறைந்த டேவிட் ஐயா -டொக்டர் ராஜசுந்தரம் மற்றும் சந்ததியார்
அனைவருடனும் பயணித்த காலங்களும் அவர்கள் எங்களைப் போன்றோரை உருவாக்கிய விதமும் மொத்தத்தில் ஒரு மக்கள் போராட்டத்தை மையப்படுத்தி வாழ்வியல் பணிகளை முதன்மை படுத்தி எம்மைப் போன்றோரையும் வழிநடத்தி தினார்கள். எம் சமூகத்தின் பால் இவர்களுக்கு இருந்த அக்கறைகளும் அர்ப்பணிப்புக்களும் அதன் செயற்பாடுகளும் எம் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு வரலாற்று பாடமே.




**எம். பௌசர்**

தமது அனுபவங்கள், பாடங்கள், பாடுகளை எழுத வரலாற்றில் சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வர வேண்டும். ஏனெனில் சமகாலத்தினை சேர்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, இளைய தலைமுறையினருக்கு முழு
வரலாறும். ஈழப் போராட்டத்தின் தொடக்கம் பற்றியஅறிதல் கொண்டு சென்று சேர்க்கப்படவில்லை. இதற்கு சுயேற்சையான ஆய்வு நிறுவனங்களும் காய்தல் உவத்தல் அற்ற ஆய்வாளர்களும் தேவைப்படுகின்றனர். அதற்கான சிந்தனையை கிளர்த்துவதற்காகவே, காந்தீயம் , டேவிட் ஐயா பற்றிய எம்மால் வெளியிடப்பட்ட நூல் அமைகிறது

**மணி நாகேஷ்**

பேரினவாதிகளின் இனஅழிப்பின் இன்னொரு வடிவமே திட்டமிட்ட குடியேற்றம் என்பதனை முன்னுணர்ந்து 70களிலேயே தமிழர் குடியேற்றங்களை நிறுவி
ஏராளமான மலையகத் தமிழரின் வாழ்வாதாரத்திற்கு வழியமைத்ததுடன் சிங்கள பேரினவாதிகளுக்கும்
சவாலாக அமைந்தார். 1983 ஜீலை இனக்கலவரத்தின் பின் தமிழகத்தில் புலம்பெயர்ந்த போதே டேவிட் ஐயாவை 1987ல் நேரில் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர் வசித்த அண்ணாநகர் வீட்டிற்கு அடிக்கடி சென்று உரையாடிய பொழுதுகள் என்றும் மறக்க முடியாதவை.

**கிருபன்**

டேவிட் ஐயா உருவாக்கிய காந்தீயத்தை முன்மாதிரியாக கொண்ட பண்ணைகளின் உருவாக்கம் மக்களின் சமகால வாழ்வாதார நெருக்கடிகளுக்கான மாற்றீடாகவும் தொலை நோக்காக- சமூக முன்னேற்றத்திற்கான வேலைத்திட்டங்களை கொண்டதாகவும் இருந்ததை நாம் அறியக்கூடியதாக உள்ளது.பண்ணை அமைப்பில் காணப்படும் கூட்டு உழைப்பு முறை வாழ்க்கையும் உயிரியல் சுழற்சி முறையிலான உற்பத்தியும் தரமான உற்பத்திகளின் மக்களிற்கான நுகர்வுக்கப்பால் மாதிரி பண்ணைகளை உருவாக்கத்தினூடாக சமூக சுற்றுச் சூழலையும் பாதுகாத்து அடிப்படை சமூக மாற்றத்தையும் கட்டியெழுப்ப முடியும் என நிருபித்துள்ளார்.

**பாலகிருஸ்ணன்**

நான் அறிந்தளவில் டேவிட் ஐயாவின் மூலம் உருவாக்கப்பட்ட காந்தீயம் என்னும் பரந்து பட்ட சமூக அமைப்பானது முழுமையாக தனது பணிகளை செய்ய முடியாது போனமையே எமது தமிழ் சமூகத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும் என்பதை உணர முடிகின்றதுடேவிட் ஐயா தனது அர்ப்பண வாழ்வில் நன்கு திட்டமிடப்பட்ட பொருளாதார கட்டுமாணங்களை நிறுவுவதற்கான அடிப்படை வேலைத்திட்டங்களை படிப்படியாக முன்னெடுத்துள்ளார்

**ரஞ்சித்**

டேவிட் ஜயாவின் நிகழ்வு பற்றிய சுவரொட்டியை லாச்சப்பல் கடைத்தெருவில் ஒட்டச்சென்ற போது பலா் கேட்டார்கள் யாா் இந்த ஐயா என்று மனதுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. யாா் இந்த டேவிட் ஐயா தமிழ்மக்களுக்கான சுதந்திர வாழ்வுக்காக தனது பதவி, பட்டம், சுகபோக வாழ்வைத்துறந்து மேற்கு நாட்டிலிருந்து தாயகம் திரும்பியவா். இவரை மட்டுமல்ல இதே கொள்கையுடன் தமது வீடுகளை விட்டு புறப்பட்டு உயிருடன் திரும்பி வராத அனைத்து அமைப்புகளையும் சேந்த ஐம்பதினாயிரம் உடன்பிறப்புக்களையும் நாம் மறக்கக்கூடாது

**கிரிஸ்டி**

நான் மாணவர் அமைப்பிலிருந்து பின் புளொட்டின் செயலதிபர் உமாமகேஸ்வரன் கொள்கையால் கவரப்பட்டு புளொட்டில் இணைந்தேன்.எமது செயலதிபர் மூலம் டேவிட்ஜயாவிற்கு அறிமுகமானேன்.இந்நிலையில் வவுனியாவின் எல்லை பறிபோகும் நிலைவந்த போது டேவிட் ஐயா டொக்டர் இராஜசுந்தரம் ஆகியோர் போராடி நின்றது. காரணம் இவர்கள் எமது மக்களை மூன்றுமுறிப்பு தச்சன் குளம் போன்ற பதகுதிகளில்குடியேற்றி இடைநிறுத்தம் செய்தனர்.

**பி.ஏ.காதர்**

டேவிட் ஜயாவை நினைவு கூர்வது எதற்காக?அவர் தனது சமூகத்தை நேசித்த ஒரு நேர்மையான எளிமையான உண்மையான மனிதர் என்பதனால் எமது நன்றிக் கடனை செலுத்துவதற்காகவா?விடுதலைப் போராட்டத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு மேற்கத்தைய நாடுகளில் அடைக்கலம் கோரி சுகபோக வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டு பொழுது போக்காக அரசியல் பேசும் நபர்களைப் போலல்லாது தனக்கு முன்னால் இருந்த சுகவாழ்வை தூ க்கியெறிந்து விட்டு ஒரு வேலைத்திட்டத்துடன் நாடு திரும்பி அதற்காக வாழ எத்தனித்து அப்பயணம் தடைப்பட்டு போன பின்னரும் அதற்கான தருணத்தை எதிர்பார்த்தபடி எஞ்சிய காலத்தை கழித்த அவரது அர்ப்பணிப்புக்கு மர-ியாதை செலுத்துவதற்கு மாத்திரம் தானா? நல்லதொரு வெகுஜன அமைப்பை கட்டியெழுப்பி அதனை புளொட் அமைப்பிற்கு தாரைவார்த்து கொடுத்து அதனால் காந்தீய அமைப்பே அழிவதற்கு காரணமாயமைந்தவர் என குற்றஞ்சாட்டுவதன் மூலம் தம்மை தத்துவார்த்த மேதைக-



பி.ஏ.காதர்

ளாக காட்டிக் கொள்ள முயல்கின்ற சிலரது வக்கிரத்தை ஒதுக்கி விட்டு நோக்கினால் அவரை நினைவு கூறுவதென்பது நாம் பார்க்கத் தவறிய அல்ல புரிந்து கொள்ளத் தவறிய அவரது பார்வையை அதன் இலட்சியத்தின் தாற்பரியத்தை அல்லது இலட்சிய நோக்கை சமூக விஞ்ஞான வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் மதிப்பீடு செய்து கொண்டு அவர் தொடக்கி வைத்த பயணத்தை தொடர வேண்டிய வரலாற்று கடமையை நினைவுட்டிக் கொள்வதற்காகத்தான்.

**அசோக்**

தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காககவும் தன் வாழ்வை அர்பணித்த டேவிட் ஐயா நம்மைப்போல் சுயநலமிக்க வாழ்வொன்றை தேர்வு செய்திருந்தால் அவர் கோடீஸ்வரராக மாறியிருப்பார்.ஆனால் அவர் எமது ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுக்காக மேன்மைக்காக தனது பதவியையும் பட்டத்தையும் துறந்து தனது சொந்த உழைப்பை தியாகம் செய்தார்.இதற்காக அவர் காந்தியத்தை தேர்வு செய்தார். காந்திய கோட்பாடுகளில் காணப்பட்ட எளிமை சிக்கனம் கிராமிய சுயபொருளாதார திட்டம் உள்ளூர் வளங்களை பயன்படுத்தல் சுயஅபிவிருத்தி தன்னிறைவு என்பன போன்ற நடைமுறை சார்ந்த திட்டங்களை சுவீகரித்து அவற்றை செயல்வடிவத்தில் நடைமுறைப்படுத்தினார். டேவிட் ஐயா தொலை நோக்கு சிந்தனை கொண்டவராக செயல்படுத்திய அரசியல் சமூக பொருளாதார கல்வி மேம்பாட்டு திட்டங்களை நாம் தொடர்ச்சியாக செயல்படுத்தி இருப்போமானால் தமிழ் பிரதேசங்களில் பல்வேறு மாற்றங்களை நாம் உருவாக்கியிருக்க முடியும்.

# தெய்யம்



**கேரளத்தின் வடக்கே மலபாரில் வழங்கப்பெறும் ஒரு கலையாகும். தெய்யம் என்பது தெய்வத் தோற்றம் தரித்தவரின் உடலில் வணங்கப்படும் தெய்வமோ அல்லது அவ்வட்டார வீரனோ பிரவேசிப்பதற்காகச் செய்யப் படும் வேண்டுதல். இந்த ஆட்டக்கலை தெய்யாட்டம் எனவும் தெய்யத்தின் வேடத்தை தெய்யக்கோலம் என்றும் வழங்குகிறார்கள்.**

கவிதை ரஜீவன் இராமலிங்கம்

# காத்திருக்கும் ஆறு

அந்த ஆறு
இன்னமும் ஓடிக்கொண்டிருக்கிறது.
எந்த ஆர்ப்பரிப்பும் இல்லாமல்,
அமைதியாக
தாழ்பகுதி நோக்கி
அதன் பயணம் நீண்டுகொண்டே
இருக்கிறது.

பெருமழைக் காலத்தில்
பெருக்கெடுப்பதும்
பின் வடிவதுமாய்
இயல்பின்நின்று பிறழாமல்
இன்னமும் ஓடிக்கொண்டே
இருக்கிறது

ஆயினும் ஆற்றின்
ஓட்டத்தில் பழைய
உற்சாகமில்லை..!
அதன் சலசலப்பும்
சங்கீதமும் வளவு நெளிவும்
வடிவு குறையாத தெறிப்புக்களும்
எல்லாமே ஓய்ந்துவிட்டன.
பேருக்கு மட்டும்
அது ஓடுகிறது.

ஆற்றின் முகத்தில்
அப்படி ஒரு அமைதி
எதையோ இழந்துவிட்ட
சோகம்.

ஆற்றின் வாட்டத்தை
அருகிருந்த மரங்கள்
அவதானித்து விட்டன.

வெள்ளிக்கால் கொலுசோடு
வயல்வெளியினூடு
துள்ளி ஓடும் ஒரு சிறுமிபோல
சிரித்து ஓடிய ஆற்றின்
இன்றைய சோகத்தை
மரங்கள் விசாரித்தன.

ஆறு, வாய் திறப்பதாய்
இல்லை
அமைதியாய்,
அசைவேதும் இன்றி
அது ஓடிக்கொண்டே
இருக்கிறது.

ஆற்றின் மௌனத்தை
மரங்களால்
அளக்க முடியவில்லை

பாவம் மரங்கள்
அவைகளுக்குத்
தெரியவில்லை
ஆற்றின் சோகம்

அவர்கள் வந்து
கால்கள் நனைக்கவும்,
கையில் ஏந்தி
தண்ணீர் பருகவும்
தூக்கம் தொலைத்த
கண்களைக் கழுவி,
அடுத்த களத்துக்குத்
தயாராகும்
அவர்தம் அழகைக்
காண்பதற்கும்,

காத்திருக்கிறது
ஆறு........!!!

# நாலாம் மாடி

உண்மைத் தொடர்.....



**சிவரதன்**

இன்று மகசின் சிறை சாலையில் இருந்து நான் விடு தலையான நாள் .இலங்கை அரசின் கொழும்பு குற்ற தடுப்பு பிரிவு (Colombo crime division -CCD ) என்றழைக்கப்படும் போலீஸ் பிரிவினரால் 25/03/2009 அன்று அவசரகால சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டேன் .. D . O ( defence Oder ) போட்டு என்னையும் தங்கள் சிறையில் அடைத்தார்கள் ..எதுக்கு என்னத்துக்கு இந்த கேள்வி க்கு எனக்கு விடை தெரியும் போது எனக்கு அழுவதா அல்லது சிரிப்பதா என்று கூட தெரியல ஆனாலும் முகத்தில் எந்த உணர்வும் வர கூடாது என்று கட்டு படுத்தி கொண்டிருந்தேன் ..எனது கட்டுபாட்டை மீறி பயம் கலந்த என் கண்கள் அவர்கள் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய உதவியது .

அது கொலன்னாவை க்கு போற பாதையில உள்ள தெமட்டகொட வில
உள்ள ஒரு 4 மாடி கட்டடம் ..அந்த கட்டடத்துக்கு வந்து தங்களை சந்திக்குமாறு வீட்ட சிவில் உடுப்போடு வந்த ஐந்தாறு பேர் ஒரு துண்டு எழுதி கொடுத்திருந்தார்கள் ..நானும் அத்தானும் அந்த கட்டடத்தின் வாசலில் இருந்த போலீசிடம் சிங்களத்தில் எழுதிய அந்த துண்டை கொடுத்திட்டு காத்திருந்தோம்

மனதுக்குள் ஆயிரம் கேள்விகள் எதற்காக என்னத்துக்காக??அதுவும்இந்த இடத்துக்கு

கொழும்பில் இருப்பவர்களுக்கு விசாரணை என்பது வாழ்கையில் ஒரு அங்கம் ..அந்த வகையில் இதற்கு முன்னரே பல விசாரணைகளை சந்தித்திருக்கிறேன்..இருந்தாலும் இது வேற என்று என் உள் மனசு சொல்லிச்சு ..என்ன என்னமோ எல்லாம் மனசுக்குள் வந்து போய் கொண்டிருந்திச்சு ..

அத்தானுடன் பேச்சு கொடுத்தேன் ..வழமை போன்று பேச்சுகளில் தொடர்ச்சியை பேண முடியல ..நான் சொன்னதை அவரும் உள்வாங்கல ..அவர் சொன்னதை நானும் உள் வாங்கி இருக்கவில்லையென்று எனக்கு தோணியது

20 நிமிடங்கள் கழிந்திருக்கும் என்று நினைக்கிறேன் ..வாசலில் இருந்த சின்ன செக் பொயின்ட்ல் இல இருந்த அந்த போலீஸ்காரன் எங்களை கூப்பிட்டு பெயர் , nic நம்பர் எல்லாம் கேட்டு பதிஞ்சான்..பின்னர் ஐ டி , போன் , பேர்ஸ் எல்லாவற்றையும் கழட்டி தர சொல்லி அதை அங்கே வைத்து விட்டு ஒரு டோக்கன் தந்தான் ...பின்னர் உள்ளே போக சொன்னான் ..

அந்த பெரிய கேற்ல் உள்ள சிறிய கேற் ஒன்றை திறந்து உள்ளே எங்களை போக சொன்னாங்க ..உள்ளே...ஆயிரம் கேள்விகள் ஒன்றை ஒன்று முண்டியடிச்சு கொண்டிருந்தன ..உண்மையில் எதுக்கு என்று
தெரியாமலே விசாரணைக்கு அழைக்கப்படுவது என்பது மனதளவில் பெரிய கஷ்டமான விடயம் ..ஏன்?

நீங்க நினைப்பீங்க நான் எதோ பல நடவடிக்கைகள் செய்திருக்கிறேன் ..அது தான் எந்த நடவடிக்கை பற்றி கேட்க போறாங்க என்ற குழப்பத்தில் இருப்பதாக ..அப்படி ஒன்றுமே இல்லையே...அது தான் பிரச்சனையே ...
அதனால் தான் அந்த கேள்வி திரும்ப திரும்ப வந்து கொண்டே இருக்கு...

ஏன்???
கேற்றை கடந்து உள்ளே வந்த நாம் பத்தடி தூரத்தில் உள்ள அந்த கட்டடத்தின் வாசல் கதவை அடைந்தோம் .எங்கள் வரவு ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்ததால் அங்கே தயாராக நின்ற போலீஸ்காரன் எங்களை முதலாம் மாடிக்கு போக சொன்னான்

அப்போது தான் திடீரென்று அந்த நினைவு வந்தது..."இந்த இடத்த எங்கேயோ பார்த்திருக்கிறேன் ..இங்கே இதுக்கு முதல் வந்திருக்கிறேன் ..படிகளில் ஏறி கொண்டிருந்தோம் ..இப்பொழுது கேள்வி மாறி விட்டது .."எப்போ இந்த இடத்தை பார்த்தேன் ? ஏன் இங்கே வந்தேன் ?
மேலே வந்து விட்டோம் ..அந்த இடத்தை கண்ணால் அளந்தேன் அப்படி தான் நினைக்கிறேன்..அது ஒரு பக்க நீளம் முழுவதும் அறைகளை கொண்டது ..அறைகள் என்பது சாதாரண வீடுகளில் உள்ள அறைகள் மாதிரி தான்.. நாங்கள் உள்ளே நுழைந்த பக்கத்துக்கு எதிர் பக்கமாக ஒரு ஜன்னல் இருந்தது..வலது பக்கத்தில் உள்ளே நுழையும் பக்கமாக ஒரு அறை..மற்றைய இடங்கள் வெறுமையாக எங்கள் வீடுகளில் "விறாந்தை " என அழைக்கப்படும் பகுதி மாதிரி இருந்தது..அந்த இடத்தில் ஐந்தாறு கதிரை போடப்பட்டிருந்தது ..ஒரு நீள் சதுர மேசை அதில் ஒருவர் இருந்து பேப்பர் வாசிச்சு கொண்டிருந்தார் ..
எங்களை அந்த கதிரையில் இருக்க சொன்னார்கள் ..மீண்டும் கேள்விகள் மனதுக்குள் ரிங்காடமிட்டன..
ஏன்?எதற்கு ?இந்த இடத்துக்கு எதற்கு முதல் வந்தேன்?

அந்த பேப்பர் வாசிச்சு கொண்டிருந்த ஆளை பார்த்தேன்.. சாடையான சுருட்டை முடி ..கண்ணாடி போட்டிருந்தார் ..நல்ல வெள்ளையும் அல்ல கறுப்பும் அல்ல இரண்டும் கலக்காத ஒரு பொது நிறம்..இவரையும் எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே ? எங்கே ? யார்??
கேள்விகள் கூடி கொண்டே போயின ..என்ன இது எனக்கு என்ன ஆயிற்று ? எதுக்கு எதை பார்த்தாலும் எவரை பார்த்தாலும் இப்படி தோணுது ..மனதை வேற திசைக்கு திருப்ப முயன்று தோற்று கொண்டிருந்தேன்.. ஏன்? எதற்கு?ஏன்? யாழ்ப்பாணத்திலிருந்து பாதையால் வந்த போது விடுதலை புலிகளை சந்திச்சதை தவிர எனக்கும் அவர்களுக்கும் எது வித தொடர்பும் இல்லையே.. எப்படி திரும்ப திரும்ப யோசிச்சாலும் ஒன்றுமே புரியாத சூனியமாகவே இருக்கு

இதுக்குள்ள அந்த பேப்பர் வாசிச்ச மனுஷன் சாடையா என்னை பார்த்து சிரிச்சது .சிரிச்ச மாதிரி தான் இருந்துச்சு ..மனம் மேலும் திக்கி தினறினது..டேய் கோதாரி
விளுவாரே யாராவது வந்து விசாரியுங்கோவேண்டா மனம் சொல்ல தொடங்கியது ..எனக்குள் வியப்பு .கோதாரி விளுவாரே என்று அம்மா எங்களை திட்டி இருக்கு அடிக்கடி இப்ப நான் அவங்களை திட்டுறேன் ..திடீரென்று அம்மா ஞாபகம் ..அம்மா..

என் அம்மா..இப்போ எப்படியும் 4 கடவுளுக்காவது நேர்த்தி வைத்திருக்கும் ..பாவம் ..சிவராதன்... என்னுடைய பெயரை தான் யாரோ பிழையாக கூப்பிட்ட மாதிரி இருந்துச்சு..திரும்பி பார்த்தேன்..என்னை தான் வர சொல்லி கூப்பிட்டார்கள் ..
வரும்போது வலது பக்கம் இருந்த அந்த அறையை நோக்கி நடந்தேன் ..அத்தானை அதிலேயே இருக்க சொல்லி விட்டார்கள் ..நான் நடந்தேன்..என் கேள்விகள் என்னை துரத்தி கொண்டிருந்தன
ஏன்? எதற்கு?

எதோ ஒரு புதுவகை பயம் ஒன்று நெஞ்சை வந்தடைத்தது ..நாம் எதுவுமே செய்யலை என்றாலும் கூட மனசுக்குள் ஒரு பயம்..யாழ்ப்பாணத்தில் இருக்கும் போது யாழ் பல்கலை கழகத்தில் படிக்கும் போது பொங்கு தமிழ்,மற்றும் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் முன்னிலையில் சில நேரங்களிலும் பின் வரிசையில் பத்தோடு பதினொன்றாக பல நேரங்களிலும் நின்று இருக்கிறேன் ..அதுக்காக இருக்குமா ? நெஞ்சு பட படத்தது....,
அந்த அறைக்குள் இப்போ நான் நின்று கொண்டிருந்தேன் ..நான் முதலில் கூறிய வாசலில் இருந்து பார்க்கும் போது வலது பக்கமாக இருந்த ஒரே ஒரு அறை..இப்படியான பதட்டமான நேரங்களில் கூட அறையை நோட்டமிட

மனம் சொல்லிச்சு ஒரு ஓரத்தில் ..அப்படி நோட்டமிட்டால் முன்னால் மேசையில் இருந்து எதோ தாள்களை புரட்டி கொண்டிருந்த அந்த சிவில் உடையில் இருந்த போலீஸ்காரன் சந்தேகப்பட்டிடுவானோ என்ற பயமும் கூடவே ...

என்னை கூட்டிடு வந்தவன் வெறும் PC என்பது அவன் நின்ற தோரணையில் தெரிஞ்சுது ..இப்போ எனக்கு முன் இருந்தவன் தான் எனக்கு தெரிஞ்சுது..சப் இன்ஸ்பெக்டர் விஜயரட்ன அவனது பெயர் என்பதை பின்னர் தெரிஞ்சு கொண்டேன்

இந்த நேரத்தில இந்த CCD நிர்வாக கட்டமைப்பை உங்களுக்கு நான் சொல்லணும் .இது ஒரு தனி அலகு. கொழும்பில் எங்கு என்ன குற்ற நடவடிக்கையில் ஈடு பட்டாலும் அவர்கள் பற்றிய தரவுகள் பேணப்படுவது இங்கே தான் ..தரவுகள் பேணப்படுவது என்றால் எதோ கணணி மயப்படுத்தப்பட்டிருக்கும் என்று நினைக்க வேணாம் ..எல்லாம் இத்துபோன பேப்பர்களாகவும் பைல்கலாகவும் தான்..இந்த CCD க்கு என்று ஒரு தனியான போலிஸ் அத்தியட்சர் ( superintendent of police ) இருக்கிறார் ..நான் அங்கெ போன நேரத்தில் அதுக்கு பொறுப்பாக ஆக இருந்தவர் அனுர சேனநாயக்க ( S P ) ..நான் நினைக்கிறேன் இவர் தான் தற்பொழுது பிரதி போலீஸ் மா அதிபராக இருக்கிறார் என்று..அவருக்கு கீழே உதவி போலீஸ் அத்தியட்சகர் ஒருவர் இருந்தார் அவரின் பெயர் ரவீந்திர என்று நினைக்கிறேன்..அதற்கு அடுத்ததாக ஒரு O I C (நிலைய பொறுப்பதிகாரி ) இருந்தார்..பெயர் ஞாபகம் இல்லை ..அவருக்கு கீழே இன்ஸ்பெக்டர் இரண்டு மூன்று பேர் இருந்தாங்க ..அவர்களுக்கு கீழே 4 சப் இன்ஸ்பெக்டர் இருந்தார்கள் ..அவர்களுக்கு கீழே பல சாதாரண போலீஸ் ஆட்கள் ..இது தான் சுருக்கமான அந்த கட்டடத்தின் நிர்வாக கட்டமைப்பு ..நாலாவது மாடியில் ளூ யும் மூன்றாவது மாடியில் யுளூ யும் இரண்டாவது மாடியில் ழுஐஊ யும் (அதாவது இப்போ நான் நின்று கொண்டிருக்கும் மாடியில் ) கீழே நிலப்பரப்பில் மற்றவர்களும் இருந்தார்கள் (இவ்வளவு விவரங்களும் அங்கெ இருந்த காலங்களில் அவ்வவ்போது தெரிந்து கொண்ட விடயங்கள் ..)

இப்படி பட்ட நிர்வாகம் உள்ள ஊஊனு யில் சப் இன்ஸ்பெக்டர் களில் விடுதலைப்புலிகள் அல்லது அவர்கள் சந்தேக கேஸ் ஐ விசாரிக்கும் சப் இன்ஸ்பெக்டர் விஜயரட்ன முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன் ...

கையில் வைத்திருந்த தாள்களை புரட்டி கொண்டே "நம மொக்கத்த " என்றான் ..

"சிவரதன் " என்றேன் .. அப்போ தான் அந்த இன்ஸ்பெக்டர் என் கண்ணை பார்த்தாக எனக்கு பட்டது ..நான் கண்களை கீழ் இறக்கி அவரது மேசையை பார்த்தேன் ..

கேள்விகள் தொடர்ந்தன ..அந்த மேசையின் மேல் கண்ணாடி போடப்பட்டிருந்தது ..அதிலே நாலைந்து பேரின் போட்டோ இருந்தது ..அதில் இருந்தவர்களது முகம் எல்லாம் அடி காயங்களால் பிரிந்து போய் இருந்தன ..ரத்தங்கள் முகங்களாக காட்சி தந்தன ..அதை பார்த்தவுடன் இன்னும் பயம் ஏற்பட்டது ...

அடிப்பானோ ?

தொடர்ந்து சிங்களத்தில் சில கேள்விகள் கேட்டான் ..சிங்களத்தில் கேட்பது கொஞ்சம் எனக்கு விளங்கும் ..ஆனால் அதற்கு சிங்களத்தில் பதில் சொல்ல கூடிய சிங்களம் எனக்கு தெரியாது ..

என்னுடைய வீடு , என்னுடைய பிறந்த திகதி மற்றும் சில விடயங்களை கேட்ட்டு என் கண்ணையும் பார்த்து தான் வைத்திருந்த தாள்களையும் பார்த்தான் ...அவன் கையில் வைத்திருந்த தாள் என்னை பற்றிய விவரங்கள் என்பது இப்போ தெளிவாகிற்று ..அவன்

கோபமாக கேள்வி கேட்டாலும் நான் சொன்ன விவரங்கள் அந்த தாள்களில் இருந்த விவரங்களோடு ஒப்பிட்டு பார்த்து சரியாக இருப்பதால் இன்னும் எனக்கு அடி விழல என்று எனது உள் மனசு சொல்லிச்சு..

உள்ளுக்குள்ளேயே ஒரு முடிவெடுத்தேன் ..தகவல் பிழைக்காமல் சொல்லவேண்டும்...இன்னமும் அந்த கேள்வி விடை இல்லாமலேயே இருந்தது..

ஏன்? என்னத்துக்கு ?

என்னுடைய மோட்டார் பைக் நம்பர் ? என்றான்.. சொன்னேன் ..

கார் நம்பர்? என்றான் .. சொன்னேன்

அப்போது தான் அதை கவனித்தேன் ..அவன் வைத்திருந்த தாள்களில் சில இடங்களில் highlight பண்ணப்பட்டிருந்ததை ..இவ்வவளவு விவரங்களை எல்லாம் திரட்டி வைத்திருக்கிறான்களே ..எதோ

பெரிய கேசில் என்னை மாட்ட போறாங்க என்று உள் மனம் சொல்லிச்சு...

அப்போ அந்த ஆள் வந்தார் உள்ளே ..நீல கலர் கொஞ்சம் பெரிய சைஸ் புல் ஸ்லிப் சேர்ட் ..ஷர்ட் உள்ளுக்குள்ள போக முடியடித்து வண்டி வெளியே தள்ளி கொண்டிருந்தது ..என்னுடைய கலர் தான் ஆள் ..தாடி பெரிசாகவும் இல்லாமல் கட்டையாகவும் இல்லாமல் இருந்துச்சு ..ட்ரிம் பண்ணி இருக்கு என்று நினைக்க வேணாம் ..எதோ சும்மா இருந்துச்சு ..

பார்த்த உடனே தெரிஞ்சுது ஆள் தமிழ் தான் என்று..ஆம் தன்னை பெரிய துப்பறியும் புலி என்று தன்னை தானே சொல்லி கொண்டு திரியும் CCD யில் சப் இன்ஸ்பெக்டர் விஜயரட்னவுக்கு அல்லக்கையாக அல்லது மொழி பெயர்ப்பாளராக இருக்கும் சப்

இன்ஸ்பெக்டர் ரங்கநாதன் எனக்கு முன்னே விஜரட்ன வுக்கு பக்கத்தில இருக்கிறார் ..

எனக்கு விளங்கிட்டுது ..இனி தான் எனக்கு சனி பிடிக்க போகுது என்று

..என் கண்ணில் இருந்த பயத்தை அவன் கண்டு கொள்ளகூடாது என்பதற்காக மீண்டும் மேசை மேல்

பார்வையை செலுத்தினேன் ..
விஜயரத்னே கையில் வைத்திருந்த அந்த பேப்பர்கள் இப்போ மேசையில் இருந்தது ..அந்த
பேப்பரின் முன் பக்கம் லெட்டெர் ஹெட் மாதிரி இருந்துச்சு.. அதில்
"Special police ". என்று இருந்துச்சு....(ஸ்பெஷல் போலீஸ் என்பது கோத்தபாய வுக்கு கீழே இயங்க கூடிய விசேட போலீஸ் )
முதலாவது கேள்வியை கேட்டான் அந்த துப்பறியும் புலி ..
ஏன் ? எதற்கு ?என்ற என் கேள்விக்கான விடை ..அவன் வாயிலிருந்து கேள்வியாக .
"சார்ல்ஸ் வியயவர்த்தனவை" எப்படி கொலை செய்தாயடா??
எனக்கு தலை கிர் என்று சுத்த தொடங்கியது ..எடுத்த உடனே யார் என்ன என்றே தெரியாத ஒருவனை எப்படி கொலை செய்தாய் என்று அதுவும் அப்படி ஒரு இடத்தில் வைத்து கேட்க நேரிட்டால் எப்படி இருக்கும்
பயத்தின் உச்சியில் கண்கள் மிரள பேந்த பேந்த முழித்தேன் ..இருதயம் டக் டக்
என்று சத்தம் போடுவது கேட்டது
ஏன்? எதற்கு? என்ற கேள்வி மறைந்து யார்? எனக்கும் அதுக்கும் என்ன சந்தர்ப்பம் என்ற கேள்விகள் நெஞ்சில் எழுந்த அதே நேரம் ...
ரங்கநாதனும் கதிரையை விட்டு வேகமாக எழும்பினான்
இப்படியான நேரங்களில் மனதில் தோன்றியதை
சரியாக வார்த்தைகளில் கொண்டுவர முடியுமா தெரியல.. பயம் மனதுக்குள்..அது கண் வழியாக வெளியே தெரிந்து கொண்டிருந்தது ..கேட்ட கேள்விக்குரிய ஆள் யார் என்றே அந்த கணம் எனக்கு தெரியல...
அந்த குழப்பமும் பயமும் சேர்ந்து எனது கண்களை மேலும் முளுச வைத்து கொண்டிருந்தன ..
மனசுக்குள் யார் அந்த சார்ல்ஸ் விஜயவர்த்தன என்ற கேள்வி திரும்ப திரும்ப அலைமோதி கொண்டிருந்த அந்த கனத்தில தான் என்னை விசாரித்த CCD யின் சப் இன்ஸ்பெக்டர் ரங்கநாதன் கதிரையை விட்டு வேகமாக எழும்பினான் ..
தலையை குனிந்து நிலத்தை பார்த்தேன் ..பயத்தில் மனம் படக் படக் என்று அடித்து கொண்டது .. வேகமாக என்னிடம் வந்த ரங்கநாதன்
அடேய் உனக்கு எஸ் எஸ் பி சார்ல்ஸ் விஜயவர்த்தனவை தெரியாதாடா ?? என்று கையால முகத்தில அடித்தான் .ஒரே ஒரு அடி தான் .நோவை விட சும்மா அடிக்கிறானே என்ற வெப்பியாரம் தான் மனசுக்குள் இருந்தது . எனக்கு என்ன உணர்வை வெளிப்படுத்துவது என்றே தெரியல ,,
எஸ் எஸ் பி என்றவுடன் ஞாபகம் வந்துச்சு ..யாழ் மாவட்டத்துக்கு சிரேஷ்ட போலிஸ் அத்த்யட்சகராக இருந்த சார்ல்ஸ் விஜயவர்த்தன 2005 ஆம் ஆண்டு இணுவில் பகுத்தியில் நடந்த மக்கள் கலவரம் ஒன்றில் மக்களால் அல்லது சில இளஞர்களால் அடித்து கொலை செய்யப்பட்டிருந்தார் .. ..அந்த சம்பவம் பற்றி உங்களுக்கு எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்பதால் அது பற்றிய விவரம் சொல்லாமல் விடுகிறேன் ..
அந்த சம்பவத்துக்கும் எனக்குமான தொடர்பு உண்மையில் என்ன என்றால் நாங்க பல்கலை கழகம் போய் வாற ரோட் இல் நடந்த சம்பவம் அது ..அதை தவிர எனக்கும் அந்த சம்பவத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை ..இது தான் உண்மை ..
உண்மை இப்படி இருக்க இவன் எதுக்கு என்னை போய் இப்படி கேட்கிறான் ? ஒரு வேளை ஏதாவது போட்டோவில் என்னை கண்டு இருப்பாங்களோ ? ஏனெனில் எனக்கு அந்த சம்பவம் பற்றி ஓரளவுக்கு எல்லா விவரமும் தெரியும் ..
தவிரவும் அந்த சம்பவத்தில் நேரடியாக தொடர்பு பட்டவர்களில் உயிரோடு இருந்த மணி என்று அழைக்கப்படுகிற ஆட்டோ சாரதி ஒருவன் நான் கொழும்பில வேலை செய்த கட்டட கம்பனியில் வேலை செய்திருந்தான் .. அவன் அப்படி சம்பந்த பட்ட ஆள் என்று அவன் வெளிநாடு போன பின் தான் எனக்கே தெரியும் ..ஒன்னும் புரியல

இப்போ நான் பதில் சொல்லணும் .. திரும்ப கேட்டான் ..
தெரியும் என்றேன் ..
எப்படி கொலை செய்தனீ ? என்றான்
எனக்கு தெரியாது ..என்றேன்
உங்கட கம்பஸ் ஆட்கள் தானே கொலை செய்தது என்றான்
இல்லை ,, நாங்க அன்று வகுப்பில் படித்து கொண்டிருந்தோம் என்றேன்

இவ்வாறு எல்லா குறுக்கு கேள்விகளும் இவன் கேட்க

ஒருவன் வாழ்ந்த
வாழ்வின் அறத்தைக் கொண்டு
மரணத்தை மதிக்கிறான்
மனிதன்

விஜயரட்ன என்னையே பார்த்து கொண்டிருந்தான் ,,அவன் நான் பொய் சொல்லுறேனா இல்லையா என்பதை அனுமானித்து கொண்டிருந்தான் ..
சில கேள்விகள் அவன் கேட்க ரங்கநாதன்
மொழி பெயர்த்தான் .. அனேகமாக பிறகு அவங்க கேட்ட கேள்விகளுக்கு நான் சொன்ன பதில் அவங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தல என்று தெரிந்ச்சது ..அதுக்கு பிறகு எங்கட பள்ளி கூட அதிபரை சுட்டது பற்றி கேட்டான் ..
எனக்கு தலை சுத்தியது ,, இரண்டு சம்பவத்துக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை ., ஆனால் இரண்டு சம்பவனக்ளும் எனக்கு வடிவாக தெரியும் .. ஆனால் எனக்கு எதுக்கு இதில சம்பந்த படுத்துறாங்க ?? குழப்பத்துக்கு என்னை தீர்வு காண விடாமல் மாறி மாறி கேட்டாங்க ..ஆனால் எதுவும் எழுதல,,,

2005 ஆம் ஆண்டுக்கு பின்னர் அரசியல் செயல்பாட்டுகளுக்கு என்று வந்த விடுதலை புலிகள்
வெளியேறிய பின்னர் யாழ்ப்பாணத்தில் அடிகடி ஒவ்வொரு இடத்தில் கொலைகள் நடந்து கொண்டே இருந்தன ..மாறி மாறி கொலைகள் விழும் ..இன்று இராணுவத்துக்கு காட்டி கொடுத்தவர்களை புலிகள் சுடுவார்கள் ..நாளை இராவணுவம் புலிகளை சுடுவார்கள் ..அப்படியான ஒரு சம்பவமாகவே ஈ பி டி பி அமைப்போடு தனது பதவிக்காலத்தின் பின் இயங்கிய நாகராசா வை 2006 ஆம் ஆண்டு யாரோ கொலை செய்திருந்தனர் ..அந்த காலத்தில் நான் கொழும்பில் இருந்தேன்

இதை எல்லாம் அவர்களுக்கு சொன்னேன் அவர்களின் கேள்விகளுக்கு பதில்களாக .. இரண்டு மணித்தியாலங்களின் பின் கேள்விகளை நிறுத்தி
வெளியே இருக்க சொனான்கள்
அங்கெ அத்தான் அப்படியே எனக்காக பார்த்து கொண்டிருந்தார் ..பின்னர் கொஞ்ச நேரத்தில் உள்ளே கூப்பிட்டாங்க ..அத்தானையும் கூப்பிட்டாங்க
அத்தானுக்கு சொன்னாங்க ...இவரில சந்தேகம் இருக்கு .. இவரை வைச்சு விசாரிக்கணும் என்று ..நீங்க போகலாம் ,,இவருக்கு மாற்று உடுப்புகள் கொண்டு வந்து கொடுக்கலாம் என்று ....
அவ்வளவு தான் ... அவ்வளவு நேரமும் விசாரிச்சிட்டு விட்டு விடுவாங்க என்று இருந்த மனம் இனி இங்கே இருக்க வேண்டும் என்ற உடன் அதை ஏற்கவே பயந்தது ..எதோ வெறுமை சூழ்ந்த மாதிரி .. அவ்வளவு நேரமும் பல கோணங்களில் அலைந்த மனம் உள்ளே இருக்க போறேன் என்ற நினைப்பை - கற்பனை கூட பண்ணி பார்க்காத அந்த இடத்தின் நினைப்பை ஒன்றாகி கண்ணீர் துளிகளாக்கி கொண்டிருந்தது
ஆண்கள் அழ கூடாதாம் ..யார் சொன்னங்க ..இந்த
நிலையில் ..எவனா இருந்தாலும் அழுவான் ..அழுதேன் ..

அத்தானை போக சொன்னாங்க ..அத்தான் என்னிடமிருந்த கார் திறப்பை வாங்கி கொண்டு போனார் ..போகும் போது என்னை பார்த்தார் ..அவருக்கும் அழுகை வந்திருக்கணும் ..அப்படியே போயிட்டார் ..

அடேய் ..உங்க கம்பஸ் பெடியங்களை எங்களுக்கு தெரியும்.. நீங்க தான் கொலை செய்தீங்க ..எங்களிடம் உன்னுடைய போட்டோ இருக்கு ..நாளைக்கு உன்னை விசாரிக்க ஸ்பெசல் போலீஸ் வருவாங்க ..அவங்களுக்கும் இதே பொய்யை சொல்லி பார் ..அப்போ தெரியும் உனக்கு "என்றான் ரங்கநாதன்
போடா..இப்ப போய் உள்ளே இரு ,, என்றாங்க ..
என்னை கீழே கூட்டிட்டு வந்தாங்க .. கீழே தான் அந்த ஊஊனு யின் சிறை அறைகள் இருந்தன .. மொத்தம் 3 சிறை அறைகள் தான் .. ஒவ்வொரு அறையும் 5 அடி அகலமும் 9 அல்லது 10 அடி நீளமும் கொண்ட அறைகள் ... முன்பக்கம் வழமையாக சினமா படங்களில் காட்டப்படும் கம்பிகளை கொண்ட கதவு தான் .. உள்ளே ஒரு பக்க சுவரில் சாய்ந்து இருக்க கூடிய மாதிரியான திண்ணை ஒன்று இருக்கும் ..அதில் ஒரு ஆள் நீட்டி நிமர்ந்து படுக்கலாம் ,, அந்த திண்ணையின் அகலம் சிறகதவின் முக்காவாசி வரை இருக்கும் .. மிச்ச கால் பகுதி நிலத்தில் கூட ஒரு ஆள் படுக்க கூடிய மாதிரி இருக்கும் .. அந்த திண்ணை மாதிரி இருக்கும் பகுதியின் முடிவில் ஒரு சின்ன ட வடிவிலான் இரண்டு அடி சுவர் அதுக்கு அந்த பக்கம் அந்த சிறை அறைக்கான மலசல கூடம் பிளஸ் குளிக்கும் இடம் .. அதாவது அந்த சிறை அறைக்குள்ளேயே இவை எல்லாம் .. அவ்வாறு 3 சிறை அறைகள் ..
அந்த சிறை அறைகள் எல்லாம் இடது பக்க சுவருடன் இருந்தன ..அதற்கு முன் அந்த உஉன யின் வரவேற்பு பகுதி..அந்த பகுதியில் தான் அந்த நிலையத்துக்கான வாக்கிடாக்கி யும் இருந்தது ,,அந்த போலீஸ் காரர் பயன்படுத்தும் ஆயுதங்கள் வைக்கும் பெட்டி இருந்தது ,, போலீஸ்காரர் டியூட்டி மாறும் போது சை வைக்கும் புத்தகம் இருந்தது ..சிறையில் இருக்கும் கைதிகளின் பதிவு புத்தகம் இருந்தது ,,, அந்த வரவேற்பு பகுதி க்கு பின் பக்கமாக அந்த ஊஊனு யின் நிர்வாக அறை இருந்தது ..
பதிவு செய்யும் ஏட்டில் பதிவதற்கு விவரங்கள் கேட்டார்கள் .. சொன்னேன் .. சொல்லி கொண்டே என்னை உள்ளே விட போகும் அந்த சிறை அறைகளை பார்த்தேன் ...
ஒவ்வொரு அறையில் உள்ளேயும் பலர் இருந்தார்கள் ... ஒரு அறைக்குள் இவ்வளவு பேரா ??? என்று யோசிச்சேன் ..அவர்கள் எல்லோருமே என்னையே பார்த்து கொண்டிருந்தார்கள் ..

தொடரும்...

# கார்த்திகை – 27



விதையின் வேர்கள்

வெளியில் தெரிவதில்லை

தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை